Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கණ්ණෝට්ටම් KANNODDAM

வெளியீடு – 62 செப்ரெம்பர் 2011 விலை : 10.00

# பக்குவமற்ற தமிழ் தலைமைகளால்

## மீண்டும் சந்தர்ப்பங்களை இழக்கும் தமிழ் மக்கள்

தமிழ் மக்களின் அரசியற் தலைமைகள் இனப்பிரச்சனைக்குரிய தீர்வு தொடர்பாக ஒரு அடிப்படையான புரிந்துணர்வுக்கு வரமுடியாதவையாகத்தான் இருக்கின்றன. இந்த பரிபக்குவக் குறைவு அண்மையில் டெல்லியிலும் எதிரொலித்தது.

மனித உரிமைகள் மற்றும் உலகபொருளாதார வளர்ச்சிக்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைப்பின் சார்பில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் சுதர்சன நாச்சியப்பன் இலங்கை வடக்கு-கிழக்கின் தமிழ் கட்சிகளுக்கு அழைப்பொன்றை அனுப்பியிருந்தார்.

ஆகஸ்ட் 23, 24ந் திகதிகளில் டெல்லியில் "துயரும் தீர்வும்" என்ற தலைப்பின் கீழ் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆகஸ்ட 25ந் திகதி இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சனை விவாதிக்கப்படவிருந்தது.



24ந் திகதி மாலை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த - குறிப்பாக தமிழ் நாட்டையும் சேர்ந்த முப்பது நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடும் வாய்ப்பும் அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தமிழ்க்கட்சிகள் இரண்டு பகல் பொழுதுகள் அமர்ந்து பேசியும் இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பாக ஒரு பொது அறிக்கையை உருவாக்கும் அளவுக்கு உடன்பாட்டிற்கு வரமுடியவில்லை. உயர்பாதுகாப்பு வலயங்கள், மக்களின் மீள் குடியேற்றம், இராணுவ மயமாக்கம், திட்டமிட்ட குடியேற்றம்,மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தமிழ்க் கட்சிகள் ஒரு கருத்தொருமைப் பாட்டிற்கு இழுபறிகளுடன் வர முடிந்தது. ஆனாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக அவ்வாறு வரமுடியவில்லை.

இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகள் நியாயமானவையே என்று இந்தியாவும், உலகமும், இலங்கையில் அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் கணிசமான மக்களும் ஏற்கக் கூடிய ஒரு தீர்வை கருத்தொருமைப்பாட்டுடன் முன்வைக்க தமிழ்க் கட்சிகளால் முடியவில்லை. இந்த நிலைமை மிகவும் அவலமான ஒன்றாகும்.

அங்கு கலந்து கொண்ட கட்சியினரில் ஒரே ஒரு கட்சியினரே "இலங்கையில் தமிழர் தேசம் என்று ஒன்று உண்டு, அது தனித்துவமான ஒரு தேசம், அதற்கு சுயநிர்ணய உரிமை உண்டு அதனை இந்தியாவும் இலங்கையும் முதலில் அங்கீகரிக்க வேண்டும்" என்ற கருத்துக்களை ஆரவாரமாக முன்வைத்தனர்.

இந்த சொற்பதங்கள் அல்லது அவற்றின் நியாயப்பாடுகள் அல்ல இங்கு பிரச்சினை. ஆனால் தமிழர்களின் இன்றைய நிலையில் இந்த சொற்சிலம்பங்கள் தமிழர்களின பிரச்சினைகளைத் தீர்க்க உதவுமா என்பதுதான் பிரச்சினை.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் கலந்து கொண்ட திரு கஜன் பொன்னம்

*(2ம் பக்கம் பார்க்க...)*

பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
පත්මනාභා ඊළාම් ජනතා විප්ලවීය විමුක්ති පෙරමුණ
**Pathmanabha Eelam Peoples' Revolutionary Liberation Front**
No.15-C, Summit Flats, Keppetipola Mw., Colombo 05, Tel: 2505372, Fax: 2552840

*பத்திரிகை அறிக்கை* **Date: 02.09.2011**

### பயங்கரவாத தடைச்சட்டத்தை அரசு நீக்க வேண்டும்

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக யுத்தத்தின் கோரப்பிடியிலும், பல்வேறு அடக்குமுறைச் சட்டங்களின் பிடியிலும் சிக்கி பல ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் இன்னல்களுக்கும் துயரத்துக்கும் உள்ளாகியது வரலாறாகும்.

மிக நீண்ட காலம் இவ்வாறு உடல் உள ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருந்த தமிழ் மக்களின் இயல்பு வாழ்விற்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதுவும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துள்ள அரசாங்கத்தின் கடமையாம்.

அந்த வகையில் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக ஜனாதிபதி விடுத்திருந்த அறிவிப்பு தமிழ், முஸ்லிம், மலையக மக்களை மகிழ்வுப்படுத்தும் செய்தியாய் அமைந்தது. பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இதனை வரவேற்றிருந்தனர். இதே போன்று பயங்கரவாத தடைச்சட்டத்தையும் நீக்குவதற்கு ஜனாதிபதி ஆவன செய்ய வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம். அதுவே, அனைத்து இலங்கை மக்களினதும் எதிர்பார்க்கையாகும்.

கடுமையான சட்டங்கள் மூலம் மக்களின் நியாயமான உணர்வுகளை, ஜனநாயக ரீதியான எழுச்சியை அடக்கிவிட முடியாது என்பது எமது நம்பிக்கை, இதுவே நம் எல்லோரதும் அனுபவமாகும்.

அழுத்தங்களுக்கு மத்தியிலும் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதாக துணிச்சலாக தீர்மானம் எடுத்த ஜனாதிபதி அவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்கி நாட்டில் ஜனநாயக சூழல் மேலும் விரிவடையவும், சாதாரண சட்டங்கள் மூலம் நீதியான சூழல் மேம்படுத்தப்படுவதற்கும் வழிவகை செய்ய வேண்டும்.

அத்துடன் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய அரசியற் தீர்வினை விரைவில் அடைவதற்கு உரிய உருப்படியான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுமாயின் புதிய முறையிலோ புதிய வடிவத்திலோ மீண்டும், மீண்டும் அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கி அமுல் நடாத்த வேண்டிய தேவை எதிர்காலத்தில் அரசுக்கு ஏற்படமாட்டாது என்பதையும் இத்தருணத்தில் கூறிவைக்க விரும்புகிறோம்.

# மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக எடுத்த முடிவை அமுல்படுத்துங்கள்

***கௌரவ கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் ஆகியோருக்கு பகிரங்க மடல்***

பிரதேச அபிவிருத்தி தொடர்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மத்திய அரசும், மாகாண அரசும் மற்றும் ஏனைய நிறுவனங்களும் இணைந்து ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் அபிவிருத்திக் கூட்டங்களை நடத்தி வருகின்றன. இக் கூட்டங்களில் முதலமைச்சர், மீள்குடியேற்ற பிரதியமைச்சர் ஆகியோர்கள் தலைமை வகிக்க அவ்வப்பகுதி அரச உத்தியோகத்தர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச பிரமுகர்கள், மக்கள் பிரதிநிதிகள் முதலானவர்கள் பங்குபற்றி வருகின்றனர். இம் முயற்சிகள் பாராட்டப்படக்கூடிய விடயங்கள் மட்டுமல்லாது ஊக்கப்படுத்தப்பட வேண்டியவையுமாகும்.

**இரா. துரைரெட்ணம்**

குறிப்பாக வாகரை, வாழைச்சேனை (தமிழ்), ஓட்டமாவடி, கிரான், செங்கலடி, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி, பட்டிப்பளை, வவுணதீவு போன்ற பிரதேச செயலக அலுவலகங்களில் அரச சார்புள்ள அமைச்சர்களின் தலைமையில் பிரதேச அபிவிருத்தி தொடர்பான கூட்டங்கள் மற்றும் அவை தொடர்பான கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.




இவ்வாறான கூட்டங்களில் ஒருசில விடயங்களுக்கு ஆரோக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆயினும் நடைமுறையில் எதிர்நோக்கும் பல விடயங்களுக்கு தீர்வு காணப்படவில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்

யுத்தத்திற்குப் பிறகு நல்ல சுமூகநிலை உருவாகி பிரதேச ரீதியான அபிவிருத்தி வேலைகளில் அனைவரும் ஈடுபட முன்வருகின்ற இவ்வேளையில் மத்திய அரசும், மாகாணசபையும் தேவையான நிதியை ஒதுக்கி நீண்டகாலமாக அபிவிருத்தி செய்யப்படாமல் இருக்கின்ற பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய முயற்சிக்க வேண்டும்.

1. இம் மாவட்டத்தில் மர்ம மனிதன் தொடர்பாக மக்கள் மத்தியில்

*7ம் பக்கம் பார்க்க...*


***ராஜீவ் கொலையாளிகள் மரண தண்டனை*** பக்கம்- 02



***மலையக மக்கள் அரசியல் அநாதைகள் அல்ல*** பக்கம்- 03



***மர்ம மனிதன் கிறீஸ் பூதம் மக்களின் நிம்மதியை..*** பக்கம்- 04



***அன்பார்ந்த நண்பர்களே ஆற்றல் மிகு தோழர்களே*** பக்கம்- 05



***சம்பூர் இந்தியா இலங்கை இறுதி ஒப்பந்தம்*** பக்கம்- 08



# மரண தண்டனை



பாரதத்தின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது.

இந்திய ராஷ்ரபதி மரணதண்டனையை உறுதி செய்தபின்னர் தமிழகத்தில் பல்வேறு குரல்கள் எழுந்தன. தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் நீதித்துறையின் தீர்ப்பில் தான் தலையீடு செய்ய முடியாது என்ற யதார்த்தத்தையும் தமிழக சட்டசபையில் தெரிவித்திருந்தார். எனினும் தமிழக சட்டசபையின் வேண்டுகோளாக மத்திய அரசிடம் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றுமாறு பரிந்துரைக்கப்பட்டது.

தமிழக உயர்நீதிமன்றமும் மரண தண்டனைக்கு இடைக்கால தடையுத்தரவு வழங்கியிருந்தது.

இந்த மரண தண்டனை தீர்ப்பினால் விரக்தியடைந்த காஞ்சிபுரத்தைச் சேர்ந்த செங்கொடி என்ற பெண் தீக்குளித்து இறந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையே ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டபோது அவரோடு இறந்தவர்களின் குடும்பங்கள் மரண தண்டனை இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் தமிழக செயற்பாட்டாளர்கள், தலைவர்களும் மரண தண்டனை உறுதி செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தியிருக்கிறார்கள்.

மரண தண்டனை கூடாது என்று மனித உரிமை செயற்பாட்டாளர்களும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இங்கு பிரச்சினை என்னவென்றால் ராஜீவ்காந்தி படுகொலையில் சம்பந்தப்பட்ட மூவருக்கு மாத்திரம் மரண தண்டனை ரத்துச்செய்யப்பட வேண்டுமென்ற பிரச்சாரம் மேலோங்கிக் காணப்படுகின்றது.

புலிகளின் பாசிச செயற்பாடுகளின் உச்சபட்ச குரூர ஆட்டமே ராஜீவ்காந்தி அவர்களின் படுகொலை.

இந்தப் படுகொலையின் மூலம் அவர்கள் ஈழத் தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் பெரும் தீங்கிழைத்திருக்கிறார்கள்.

இந்தக் குற்றவாளிகள் நீண்டகாலம் சிறையில் கழித்துவிட்டதால் மரண தண்டனை தேவையில்லை என்கிறார்கள். அவர்கள் தண்டனையை அனுபவித்து விட்டார்கள் என்பது இவர்களின் வாதம்.

மரண தண்டனை மிகச்சில நாடுகளிலேயே இன்னும் அமுலில் இருக்கிறது. ஜனநாயக சமூகத்தில் மனித உரிமைகளை பேணும் சமூகத்தில் அது தேவையில்லை என்கிறார்கள்.

காலவோட்டத்தில் மரண தண்டனை இல்லாமல் போவது நல்லதுதான். ஆனால் ஈவிரக்கமற்ற படுகொலைகளிலும், பாலியல் பலாத்காரத்திலும், போதைமருந்து வியாபாரத்திலும் ஈடுபடுபவர்களை என்னசெய்வது?

அடுத்த துயரம் என்னவென்றால் கிரிமினல்களை, பாசிசவாதிகளை பகத்சிங், சுகதேவ் ஜூலியஸ் பூசிக் போன்ற உண்மையான சுதந்திரப் போராளிகளின் நிலைக்கு உயர்த்தும் அவலமும் நிகழ்கிறது.

மரண தண்டனை தேவையில்லை என்றால் சமூகத்திற்கு பெருந்தீங்கிழைத்தவர்கள் தொடர்பாக எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்வது. அப்படியானால் ஆயுள்தண்டனை என்பது வாழ்நாள் பூராவும் அனுபவிக்க வேண்டிய தண்டனையாக மாற்றப்பட வேண்டும்.

இலங்கையிலும் மரண தண்டனை பற்றிய வாதப்பிரதிவாதங்கள் நடந்திருக்கின்றன. கிரிஷாந்தி படுகொலையில் சம்பந்தப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஆயுள் தண்டனை பெற்று ஒருவாறு சிறையைவிட்டு வெளியேறிவிட்டார்கள். இதுபோன்று இன்னும் பல சம்பவங்கள் இருக்கின்றன.



பாலியல் பலாத்காரத்திற்கு மரண தண்டனை விதிக்கலாமா? இல்லையா என்ற வாதப்பிரதிவாதங்கள் இருக்கின்றன. பாலியல் பலாத்கார கொலைக்கும் மரண தண்டனை என்று இருக்கும்போது பாலியல் பலாத்காரத்தில் ஈடுபடும் கிரிமினல்கள் கொலையையும் செய்துவிட்டு செல்கிறார்கள்.

உண்மையில் இவை இரண்டிற்குமே வாழ்நாள் பூராகவும் அவர்கள் சிறையில் கழிக்க வேண்டும் என்ற நிலை வேண்டும்.

மனித குலத்திற்கு தீங்கிழைத்தவர்கள் கதாநாயகர்களாக உலாவர அனுமதிக்கக்கூடாது. அது மனித குலத்தை காட்டுமிராண்டி நிலைக்கு இட்டுச் செல்லும். ●

## பக்குவமற்ற தமிழ் . . . (1ம் பக்கத் தொடர்ச்சி)

பலம் இதனைத் திரும்பத் திரும்ப உச்சரிப்பதிலேயே அக்கறை கொண்டிருந்தார்.

இது அதிதீவிர நிலைப்பாடு எனத் தெரிந்து கொண்டும் இந்த நிலைப்பாட்டிற்கு மாற்றான யதார்த்தமான நிலைப்பாடொன்றிற்கு மற்றைய கட்சியினருடன் சேர்ந்து முன்வருவதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்ததுதான் இங்கு முக்கியமான விடயமாகும்.

இறுதியாக இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஒரு நியாயமான நிலைப்பாட்டினை இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டது என்பதே நடந்து முடிந்த விடயமாகும்.

நாம் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நியாயமானதும், முக்கியமானதுமான சில விடயங்களை இந்திய சட்டமன்றங்களில் வலியுறுத்தும் வகையாக முன்னெடுத்துச் சென்றிருக்க முடியும்..

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த்தலைவர்களிடம் அறிய முயன்றதெல்லாம் நறுக்குத்தெறிக்க நச்சென்று சொல்ல வேண்டிய - சொல்லக்கூடிய அரசியற் தீர்வு விடயங்களையே.

ஆனால் கோவிலில் கந்தபுராண பாராயணம் செய்வதைப் போன்ற சங்கிலியன் காலம் தொடக்கம் இன்று வரையான வரலாற்றுக் கதையையோ, அல்லது தனி இறைமை கொண்ட தமிழீழத்திற்கு நிகரான ஏற்பாட்டையோ அல்ல. மாறாக மக்கள் எதிர்பார்ப்பது இலங்கையின் அரசியல் முறைமையில் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழ் மக்கள் இந்த நாட்டின் சிங்கள மக்களுக்குச் சமாந்தரமாக முறையான பங்குதாரர்களாக ஆக்கப்படும் விதமான அரசியலமைப்புச் சீர்திருத்தத்தையே.

தமிழ் பேசும் மக்களும் சிங்கள மக்களும் சரிநிகர் சமானமாக ஐக்கிய இலங்கைக்குள் வாழும் நிலை ஏற்படுத்தப்படுதல்,

நிதி அதிகாரம், சட்டம் ஒழுங்கு, மற்றும் நிலப்பயன்பாட்டு அதிகாரங்கள் பகிரப்படுதல் .

இவ்வாறாக விடயங்களை நாம் முன் வைப்பதில் வெளிப்படையான நியாயம் இருக்கிறது. இது இந்தியாவிலுள்ள அதிகாரப்பகிர்வு முறைக்கும் இந்தியாவின் அரசமைப்பின் செயன் முறைக்கும் இசைவுபட்டதும் கூட.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு திரு கஜன் பொன்னம்பலத்தின் அதிதீவிரமான உரத்த குரலுக்கு முன்னால் ஏன்தானோ மௌனமாகிப்போனார்கள் என்பது எமக்கு இன்னமும் புரியாத புதிராக உள்ளது.

பிரச்சினை தீர்க்கப்பட்ட வேண்டிய இடம் இலங்கையே. அதற்கு இந்தியாவின் அனுசரணை மிகவும் அவசியமாகும்.

பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியவர்கள் - முன்முயற்சி எடுக்க வேண்டிய பிரதான பிரிவினர் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களே!

புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் உள்நாட்டில் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்கு ஒத்துழைக்க வேண்டும். அதை விடுத்து தமது நாடு கடந்த தேசியவாதக் கனவுகளை உள்ளூர் மக்கள் மீது திணிக்கக் கூடாது. ஜனநாயக பூர்வமாக நாட்டு நிலைமையை, எமது மக்களின் நிலைமைகளைக் கருத்திற் கெடுத்ததாக ஆக்க பூர்வமானவையாக அவர்களின் பங்களிப்பு அமைய வேண்டும்.

சமூகப் பொறுப்பில்லாத செயற்பாடுகளால் ஆக்க பூர்வமானதொரு வரலாற்று பாத்திரத்தை டெல்லியில் ஆற்றியிருக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் இழக்கப்பட்டுவிட்டது என்றே கவலைப்படவேண்டியுள்ளது.

தற்போது கிறிஸ்பூதப் பீதி சமூகத்தையே மனநோயாளியாக்கிவிடுமோ என அஞ்ச வேண்டியுள்ளது, பாதுகாப்பற்ற, நிம்மதியற்ற, நிராதரவான, நிர்க்கதியான நிலையினால் மக்கள் அல்லோலகல்லப்படுகிறார்கள். மரத்தால் விழுந்தவரை மாடேறி மிதித்த அவலத்தை விஞ்சிய நிலை தான் எமது மக்களின் வாழ்வு. அநியாயங்களைத் தட்டிக் கேட்பதற்கு அவசியமான ஐக்கியப்பட்ட வீரியம் மிக்க தலைமைத்துவத்தின் அவசியம் இங்கு உணரப்படுகிறது.

அறிவு பூர்வமான, ஆக்கபூர்வமாக ஓர் அரசியற் தீர்வை ஐக்கிய இலங்கைக்குள் பெற்று தமிழ்மக்கள் தமது பகுதிகளில் சுயநிர்வாகம் செய்யக்கூடிய சுயாட்சி முறையொன்றை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு செலுத்துதல் வேண்டும். இன்று தமிழ் சமூகத்தின் இருப்புடன் தொடர்புபட்ட வகையில் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் இதனையே உணர்த்துகின்றன.

மக்களின் எதிர்காலத்துடன் பாதகமாக விளையாடுவது தார்மீக உணர்வு கொண்ட தலைமைத்துவங்கள் செய்யக்கூடிய காரியமாகாது. இதில் எமக்கு எமது கடந்தகால பட்டறிவுகள் பயன்பட வேண்டும்.

இலங்கையில் ஜனநாயகம், சமத்துவமான இன நல்லுறவு, பல்லினப்பாங்கு மற்றும் மனித உரிமைகள் ஆகிய வற்றின் மீது அக்கறை கொண்ட அனைத்து சத்திகளும் மற்றைய பேதங்களை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றிணைந்து செயற்படுவதே தமிழர்களின் மீட்சிக்கும், அத்துடன் எண்ணிக்கையில் சிறுபான்மையான ஏனைய தேசிய சமூகங்களின் மீட்சிக்கும், ஒட்டுமொத்தமாகப் பார்ப்பின் இலங்கையின் அனைத்து மக்களினதும் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகளினது மீட்சிக்கும் அவசியமாகும். ●

## யுத்தம் முடிந்து இரண்டு வருடங்களாகியும் சிறுபான்மையினரின் உரிமைகள் மதிக்கப்படவில்லை

### கத்தோலிக்க ஆயர் கவலை

இலங்கையில் பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் உரிமைகளை மதிக்கவில்லை என்றும் பெரும்பாலானோர் இந்த நாடு பல்மொழிகளாலும், பல மதங்களையும், பல கலாச்சாரங்களையும் கொண்டிருப்பதற்குரிய தீர்வினை மூன்று தசாப்தகால யுத்தத்தின் பின்னரும் அங்கீகரிக்கவில்லை என்றும் கத்தோலிக்க ஆயர்கள் மாநாட்டின் செயலாளர் பிஷப் நோர்பேட் அன்ட்ராடி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில் கடந்த காலத்தை மறைத்துவிட்டு உண்மையான சமாதானத்தை அடைய முடியாது என்றார். அரச படைகளுக்கும் மக்களுக்கு மிடையே நிலவி வரும் உறவுகள் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியுள்ளன. இங்கு பல்வேறு கருத்துக்களின் இருப்பை அங்கீகரிக்கும் போக்கு குறைந்து வருகின்றது என்றும் குறிப்பிட்டார்.


## தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

அபிப்பிராயங்கள் விமர்சனங்கள் ஆலோசனைகளையும் ஆக்கங்களையும் வரவேற்கிறோம். அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்

EPIC
PO BOX 431
SUTTON SM1 9LE
UK
email : eprlfp@yahoo.co.uk

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

29 A, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
021 222 2022

159, கடல்முக வீதி
திருகோணமலை.
077 9634902

# மலையக மக்கள் அரசியல் அநாதைகள் அல்ல – இவர்கள் இந்த நாட்டின் ஒரு சிறுபான்மையான தேசிய இனமே! – வாழ்வில் ஏழைகளாயினும் இங்கு பெரும்பான்மையான பாட்டாளிகள் இவர்களே! இன்னமும் இந்த நாட்டின் பொருளாதார முதுகெலும்பும் இவர்களே!

**குறிஞ்சி குமார்**

இலங்கையில் வாழும் அனைத்து சமூகங்களுக்கும் இந்தியாவோடு தாய் வழி உறவுமுண்டு. தந்தைவழி உறவுமுண்டு. காலத்தால்தான் சற்று வேறுபாடு உண்டு. இங்கு தூய்மையான இலங்கையர் என்று எவரும் இருப்பது சாத்தியமில்லை. ஆனால் இங்கு மலையகத் தமிழர்களை மட்டுமே இந்திய வம்சாவழியினர் எனவும் அதனால் அவர்கள் அந்நிய தேசத்து அடிவழி வந்தவர்கள் எனப் பார்ப்பது தவறு. அதனைக் காரணம் காட்டி இவர்களை அரசியல் அநாதைகளாக-பொருளாதார அடிமைகளாக இந்த நாடு ஆக்கி வைத்திருந்த காலம் ஒரு மிகக் கொடூரமான காலமாகும்.

பிரித்தானியர்களாலும் அவர்களது உள்ளூர் ஏஜண்டுகளாலும் மலையகத் தமிழ் மக்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட காலத்திற்குப் பின்பே காடுகளாயிருந்த இலங்கையின் மலைகளிற் பெரும்பாலானவை தேயிலை, கோப்பி மற்றும் றப்பர்த் தோட்டங்களாயின. இலங்கையின் நவீன பொருளாதார வளர்ச்சிக்கு மலையகத் தமிழர்களின் பரம்பரையினர் செய்த அளவுக்கு தியாகங்களை இலங்கையின் வேறெந்த சமூகத்தவர்களும் செய்திருக்க மாட்டார்கள். பிரித்தானியரின் அரசியற் பார்வையில் மலையக மக்களும் இலங்கையர்களாவே கருதப்பட்டார்கள். இலங்கை மக்களுக்கு வாக்குரிமை கிடைத்த போது மலையக மக்களுக்கும் அந்த வாக்குரிமையில் பங்கு கிடைத்தது. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த காலகட்டத்தில் மலையகத் தமிழர்களுக்கு ஏழு சதவீத பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைத்திருந்தது.

இலங்கையில் தமிழ் பேசுவோரில் 35 சத வீதத்துக்கு மேலாகவும், உடல் உழைப்பால் வாழும் இலங்கையின் பாட்டாளி வர்க்கத்தவர்களில் 75 சதவீதத்துக்கு மேற்பட்டவர்களாகவும் அன்று மலையகத் தமிழர்களே இருந்தார்கள். இதனால் அன்றைய முதலாளித்துவ சிங்கள இனவாத அரசியற் தலைவர்கள் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிப்பது போல மலையக மக்களின் குடியுரிமைகளையும் வாக்குரிமைகளையும் பறித்து சாதனை செய்தார்கள். அதனால் அரசியல் ரீதியாக இலங்கையில் தமிழ் பேசுபவர்கள் 35சத வீதத்தால் குறைக்கப்பட்டார்கள், இலங்கையின் தேர்தல் அரசியலில் பாட்டாளி வர்க்கத்தின் ஆற்றல் 75 சதவீதத்தால் குறைக்கப்பட்டது.

கணிசமான அளவு இந்தியாவுக்குத் துரத்தப்பட்டதாலும் அரசினால் ஊக்குவிக்கப்பட்ட சிங்களக் குடியேற்றங்களாலும் பின்னடைந்த பொருளாதார நிலைகளாலும் தொடர்ந்து பலவீனப்படுத்தப்பட்ட மலையகத் தமிழர் சமூகம் ஐந்து தசாப்தங்களின் பின்னரே மீண்டும் குடியுரிமை மற்றும் வாக்குரிமைகள் பெற்ற ஒரு தனித்துவ அரசியற் சமூகமாக எழுந்து நிற்க முடிந்தது. இந்தக் காலகட்டத்துக்கு இடையில் இந்த சமூகத்தின் சனத்தொகை விகிதாசாரம் சுமார் அரைவாசியாக்கப்பட்டதோடு இதன் தனித்துவமான நிலப்பரம்பல் மிகவும் குறுக்கப்பட்டதோடு சிதறடிக்கப்பட்டு விட்டது.

மலையக மக்களின் வாக்குரிமை என்பது இப்போது ஆளும் பெரும்பான்மையினருக்கு ஒரு தாங்கு தண்டைக் கொடுப்பதற்கும் மலையகத்தைச் சேர்ந்த ஒரு சிலர் ஆட்சியிலிருப்போருக்கு தொங்கு தசையாக இருந்து வயிறு வளர்ப்பதற்குமே பயன்படுகிறது. இந்த மக்களின் வாக்குவங்கி அவர்களின் சமூக நலன்களின் முன்னேற்றத்துக்கான அரசியல் வல்லமையாக இருக்கிறது என்பதைவிட அவர்களை இலங்கையின் பெரும்பான்மை இனத்தவர்களின் ஏதோவொரு கட்சியொன்று அவ்வப்போது போடுதடியாகப் பாவிப்பதற்கே பயன்படுகிறது. இதுவே கடந்த பதினைந்து ஆண்டுகால மலையக அரசியல் வரலாறாக உள்ளது.

மலையக மக்கள் வாக்குரிமையற்று இருந்த காலத்தில் அவர்களது தொழிற்சங்க வல்லமை இலங்கையின் அரசியல் பொருளாதார அரங்கில் ஒரு பெரும் சக்தியாக இருந்தது. அப்போது மலையக மக்கள் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு மிகவும் வேண்டிய முக்கியமானவர்களாக இருந்தார்கள். இதனால் மலையக மக்கள் மத்தியில் முற்போக்கு மற்றும் புரட்சிகர அரசியல்கள் வலுவாக வளமாக நிலவின. இலங்கையின் பொருளாதாரத்தில் ஒரு பக்கம் ஆட்டம் ஏற்படலாம் அதைனை வீழ்ச்சியடைந்து விடாமல் காப்பாற்றி நிற்கும் ஆற்றல் மலையக மக்களின் பொருளாதாரத் தளத்துக்கு இருந்தது. அதேபோல இலங்கையின் பொருளாதாரத்தை அசைத்து ஆட்சியாளரைக் கிடுகிடுக்க வைக்கும் அளவுக்கு மலையக மக்களின் தொழிற்சங்க சக்திகளுக்கிடையே ஒரு போராட்ட ஒற்றுமையும் நிலவியது.

1989ம் ஆண்டு நடைபெற்ற விகிதாசார முறையிலான பாராளுமன்ற தேர்தலுக்குப் பின்னர் பாராளுமன்றத்துக்கான 225 பேரில் மலையகத்திலிருந்து பத்தோ அல்லது பதினொரு தமிழர்கள் மலையக மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படலாம் என்ற நிலை ஏற்பட்டது. இது மலையக மக்களுக்கான ஓர் அரசியற் பலமாகவே அப்போது கருதப்பட்டது. ஆனால் நடைமுறையில் இதுவே மற்றொரு புறத்தில் மலையக மக்களின் அரசியற் பலத்தை மட்டுமல்ல தொழிற்சங்கப் பலத்தையும் பலவீனப்படுத்திய ஒன்றாக மாறியுள்ளது. பெரும்பான்மைத் தேசிய இனத்தின் பிரதான கட்சிகளின் தொங்கு தசைகளாக மலையக அரசியற் தலைவர்களை மாற்றியுள்ளது. இதனால் மலையக மக்களின் தொழிற்சங்க வல்லமையும் குரலிழந்து போயிருக்கிறது.

அமைச்சர் பதவிகளைக் காப்பாற்ற வேண்டுமென்றால் அரசாங்கத்தின் சொல்லுக் கேட்கும் கிளிப்பிள்ளையாக இருக்க வேண்டிய கட்டாயத்துக்கு மலையகத் தமிழ்த் தலைவர்கள் ஆகியிருக்கிறார்கள். ஒருவர் மலையக மக்களின் அரசியல் பொருளாதார உரிமைகளுக்காக உரத்துக் குரல் கொடுத்தால் எங்கே அவர் மற்றதொரு மலையகத் தமிழ்ப் பாராளுமன்றப் பிரதிநிதியால் தள்ளி விழுத்தப்பட்டு மந்திரிப் பதவியை எடுத்து விடுவாரோ என்ற பயத்திலேயே இன்று மலையகத் தமிழ் மக்களின் அரசியற் தலைவர்கள் தமது அரசியல் தொழிற் சங்க பலங்களை எல்லாம் அடக்கி வைத்துக் கொண்டு செயற்பட்டு வருகிறார்கள். மலையகத்தில் சில றோட்டுகள் போட்டோம் சில நூறு வீடுகளைக் கட்டிக் கொடுத்தோம் என்று சொல்வதை விட பத்து லட்சம் பேருக்கு மேல் சனத்தொகை கொண்ட மலையக மக்களுக்காக இவர்கள் என்னத்தைச் சாதித்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா! யானைப் பசிக்கு சோளப் பொரி காட்டியிருக்கிறார்கள்.

கடந்த காலங்களில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் வன்னியில் குடியேறிய இந்திய வம்சாவளி மக்களில் கணிசமான தொகையினர் இறுதி யுத்தத்தின் போது கொல்லப்பட்டவர்களில் அடங்குவர். இந்திய வம்சாவளி தமிழ்மக்களின் குடியுரிமை வாக்குரிமை எவ்வாறு அரசியல்வாதிகளின் நலன்களுக்காகப் பறிக்கப்பட்டதோ அம்மாதிரியான நிலைமையே இறுதி யுத்தத்தின் போதும் இம் மக்கள் மனித கேடயங்களாக, யுத்த தேவைகளுக்காக பாவிக்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டனர். எஞ்சியோருக்கு முகாமே வாழ்வாகி விட்டது. இவர்கள் வெளிநாடுகளுக்கோ, அல்லது பாதுகாப்பான இடங்களிலோ சென்று வாழ முடியாதவர்கள். இவர்களுக்கு சொந்த நிலங்களில்லை. சகோதர தமிழர்களை நம்பி வந்தவர்கள். இன்று முகவரியுமில்லாமல் தமது சமூக அடையாளங்களையும் தொலைத்து விட்டு போக்கிடமற்று நிற்கிறார்கள்.

எவ்வாறு மலையகத் தோட்டங்களில் தமக்கென சொந்தமில்லாத நிலப்பரப்புக்களில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தங்களின் வாழ்க்கையைக் கொண்டு நடத்துகிறார்களோ அவ்வாறானதொரு நிரந்தர அகதி வாழ்க்கையையே கடந்த பல தசாப்தங்களாக வன்னி பிரதேசத்திலும் வாழவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தியாவசிய தேவைகள் யாவற்றுக்கும் கையேந்தி அண்டுவதற்கு மற்றவர்களை எதிர்பார்த்து அலைய வேண்டிய நிலைமையே இவர்களுக்கு. மலையகத்தில் இருந்து துரத்தப்பட்டதால் சொந்தங்களைத் தொலைத்து விட்டு வடக்கு கிழக்கில் தொப்பிள் கொடி உறவுகள் இருக்கின்றன என நம்பி வன்னியை அண்டியவர்கள் இன்று வன்னிக்கும் சொந்தமில்லாதவர்களாக நிற்கிறார்கள்.

இவர்கள் இந்நாட்டின் வந்தேறு குடிகள் அல்ல. இந்த நாட்டை வளம்படுத்தப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட குடிமக்கள். இம் மக்களின் கடுமையான உழைப்பு இலங்கை என்றொரு நாட்டை உலகம் திரும்பிப் பார்க்க வழிகோலியது. தாங்கள் உயிர் வாழ்வதற்கும் இந்த நாட்டை பொருளாதார ரீதியாக வாழ வைக்கவும் உழைக்கும் மலையக மக்களுக்கு உரிய தேசிய அரசியல் அந்தஸ்தை பெற்றுக்கொள்வதற்கு வேண்டியனவற்றை இந்த நாட்டின் அரசியற் தலைவர்கள் காலம் தாழ்த்தாது சிந்தித்து மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையின் ஏனைய சமூகங்கள் அனுபவிக்கின்ற - கோருகின்ற அரசியல் உரிமைகளை அல்லாமல் மலையக தமிழ் மக்கள் கடந்த 60 வருடங்களாக தங்களின் அத்தியாவசியமான அன்றாட வாழ்வுக்காகப் போராட வேண்டிய நிலைமையே தொடர்கின்றது. அடிப்படை வாழ்வாதாரப் பிரச்சினைகளான குடியிருப்பு, சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, மின்சாரம், வேலைவாய்ப்பு போன்றவற்றைக்கூட முறையாகப் பெற்றுக்கொள்ள இன்னும் எத்தனை தசாப்தங்கள் ஆகுமோ என்ற நிலையே உள்ளது.

மலையக மக்களும் இந்த நாட்டின் ஒரு தேசிய இனத்தவர் என்பதை அரசியல் அரங்கில் ஏற்றுக்கொள்ளும் நிலையை ஏற்படுத்த வேண்டும். மலையக மக்கள் இலங்கையின் ஏனைய இனங்களின் மக்களோடு சகோதரர்களாக சேர்ந்து வாழவே விரும்புகின்றனர். இந்த சகோதரத்துவம், சுதந்திரம், சமத்துவம், சுயமரியாதையை இழந்ததாக அல்லாமல் நிலைநாட்டப்பட வேண்டும.

இன்றைய இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் இந்தியா மற்றும் சர்வதேச சமூகங்கள் முனைப்பாகவும் ஆர்வத்துடனும் ஈடுபாடுகள் காட்டுகின்ற இத் தருணத்தில் மலையக மக்கள் சமூகத்திற்கான கோரிக்கைகளும் முன்னணிக்குக் கொண்டு வரப்படல் வேண்டும். மலையகத் தலைவர்களிடையே எதனைக் கோர வேண்டும் என்பதில் வேறுபட்ட பல கருத்துக்கள் இருந்தாலும் குறைந்த பட்சம் ஒருமித்த கருத்துக்கள் உருவாகவும், ஏனைய இனத்தவர்கள் அவற்றின் நியாயங்களை அச்சமின்றி ஏற்கும் வகையிலும் அவை வெளிக்கொணரப்பட வேண்டும்.

அதற்காக பொதுவான நீண்டகால வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கி செயற்படுத்த மலையகத்தின் அறிவு ஜீவிகள், கல்விமான்கள், அரசியல் சமூக செயற்பாட்டாளர்கள் முன்வர வேண்டும். சமூக அடிமட்டங்களில் இருந்து சமூக விழிப்புணர்வு கொண்டவர்கள் காலத்தின் அவசர அவசியங்களை உணர்ந்து எழுச்சிபெற வேண்டும். மலையக மக்களின் அரசியல் தீர்வு வெறுமனே தேர்தலில் வாக்களிப்பது என்பதல்ல. மாறாக, இந்த நாட்டின் அரசியல், பொருளாதார முறைமையில் உரிய சம பங்காளர்களாக ஆகும் நிலையை நிலை நாட்டுவதே. ●

## பிரித்தானிய அரசாங்கம் செலவுகளைக் குறைத்ததால் ஆங்கில தேசம் வன்முறையால் எரிந்தது

உலக வங்கித்துறையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளுவதற்காக ஏற்பட்ட செலவினங்களை ஈடுகட்டுவதற்காக பிரித்தானிய அரசாங்கம் பொதுச் செலவினங்களை 80 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்களால் 2015க்குள் குறைப்பதற்குத் திட்டமிட்டது. இதுவே லண்டனில் வன்முறைகள் வெடிக்கக் காரணமாகியது என்று கூறப்படுகிறது.


இந்தக் கலவரங்களில் வன்முறையாளர்கள் கடைகளுக்கும் வாகனங்களுக்கும் தீயிட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முகமூடித் திருடர்கள் கொள்ளைகளில் ஈடுபட்டார்கள். லண்டன் மாநகரப் பொலிசார் இந்த வன்முறையைக் கட்டுப்படுத்த முயன்ற போதிலும் அது இங்கிலாந்தின் ஏனைய முக்கிய நகரங்களுக்கும் பரவி ஆங்கில தேசமே கொழுந்துவிட்டு எரிந்தது.

# மர்ம மனிதன் – கிறீஸ் பூதம் மக்களின் நிம்மதியை குலைத்து நிற்கும் இன்றுமொரு அவலம்

தோழர் மோகன்

மலையகத்தில் பிறப்பெடுத்த கிறிஸ் பூதம் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மன்னார், யாழ்ப்பாணம் என இப்போது வடக்கு கிழக்கு முழு வதும் ஒரு மாதத்திற்கும் மேலாக பீதியை கிளப்பிக்கொண்டிருக்கிறது. கிறிஸ் பூதம் சிறுவர்கள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை பேதமில்லாமல் அனைவரையும் கிலி கொள்ள வைத்திருக்கின்றது.

கிறிஸ் பூதம் என்ற பேச்சு எழுந்தபோது இந்தளவு பாரதூரமானதாக ஆகும் என யாரும் கருதவில்லை. பல வருடங்



களுக்கு முன்னர் முள்ளு மனிதன் என ஒருவனது நடமாட்டம் பற்றி பீதி கிளம்பியிருந்தது. முள்ளு மனிதனைப் பிடிக்க முனைந்தவர்களை காயப்படுத்தி விட்டு தப்பிவிடுகிறான் என்பதால் முள்ளுமனிதன் பிரசித்தமானான். ஆனா லும் அவன் கிறிஸ் மனிதன் அளவுக்கு பிரபலமாக வில்லை அவன் பற்றிய வதந்தி நீடித்த ஆயுளைக் கொண்டிருக்கவுமில்லை. ஊடகங்களும் இந்தளவிற்கு அவனுக்கு முக்கியத்துவம் அளிக்க வில்லை. முள்ளுமனிதன் ஒரு திருட்டுப் பேர் வழியே என்பதனை பின்னர் மக்கள் புரிந்துகொண்டனர்.

கிறிஸ் மனிதனும் திருட்டுக்களில் ஈடுபடும் ஒருவரது யுக்தி என்றே ஆரம்பத்தில் நம்பப்பட்டது. கிறிஸ் மனிதனைப் பிடிக்க முடியாது பிடிக்க முனைந்தால் வழுக்கிக் கொண்டு தப்பி ஓடிவிடுகிறான் என்று ஒரு வியாக்கியானமும் பிடிக்க முனைபவர்களை கிறிஸ் கொண்டோ அல்லது தனது கூரிய நகங்களைக் கொண்டோ காயப்படுத்திவிட்டு தப்பிச் செல்கிறான் என்று மற்றொரு விளக்கமும் பொது மக்களின் கதையாடல்களில் தொனித்து வந்தன.

கிறிஸ் மனிதன் கிறிஸ் பூதமாகி இப்போது மர்ம மனிதனாக விஸ்வரூபம் எடுத்து எம் மத்தியில் வலம் வந்துகொண்டிருக்கிறான். இந்த கிறிஸ் பூதம் - மர்ம மனிதன் கதைகளால் தூக்கம் கெட்டவர்களும், தூக்கத்தைத் தொலைத்தவர்களும் அனேகம்.

ஒரு சிலர் இது வெறும் புனைவுக் கட்டுக்கதை - கற்பனை என்று கூறினாலும் பெரும்பாலானவர்கள் மர்ம மனிதன் நம் மத்தியில் உலாவுவதாக நம்புவதற்கு வலிமையான செய்திகள் இங்கு உள்ளன.

ஆரம்பத்தில் திருடர்களின் தந்திரம் என்று கருதப்பட்டாலும் இப்போது பாது காப்புப் படைகளைச் சேர்ந்தவர்களே இவ் வாறு மர்ம மனிதர்களாக உலா வருவ தாக நம்பப்படுகின்றது.

கிறிஸ் பூதம் அல்லது மர்மமனிதனின் தாக்குதலில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் காயமடைந்ததாக ஆங்காங்கே செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கின்ற அதே வேளை மர்மமனிதர்கள் படை முகாம்களுக்குள் நுழைந்து தப்பித்து விடுகிறார்கள் படையினர் அவர்களுக்கு பாதுகாப்பளிக்கிறார்கள் என படையினரோடு முரண்பட்டு படையினரின் மீது தாக்குதலில் பாதிப்படைந்தவர்களே அதிகம். பொத்துவில், கிண்ணியா, மட்டக்களப்பு மன்னார், யாழ்ப்பாணம் என இப் பட்டியல் நீள்கிறது. கிண்ணியாவில் கடற்படையினராலும், மன்னாரில் மற்றும் யாழ்ப்பாணத்தின் நாவாந்துறை, கொக்குவில் மற்றும் குருநகர் ஆகிய இடங்களில் இராணுவத்தினராலும் சமீபத்தில் மிக மோசமாக நூற்றுக்கணக்கான வர்கள் தாக்கப்பட்டுள்ளார்கள்.

மர்மமனிதன் பீதியில் ஓடிய தொழிலாளர்கள் படுகாயம்.

மர்ம மனிதன் என்ற சந்தேகத்தில் வானில் சென்றோர் மீது தாக்குதல் வான் கண்ணாடி சேதம்

மர்மமனிதரைக் கலைத்துச்சென்ற வீட்டுக்காரருக்கு தர்மஅடி என்பனவும்

மர்ம மனிதன் பீதியால் பாதிக்கப் பட்டவர்கள் தொடர்பில் வெளியான பத்திரிகைச் செய்திகளாகும்.

மர்ம மனிதர்கள் படை நிலைகளுக்குள் நுழைந்து தப்பித்துக் கொண்டதைக் கண்டதாகத் தெரிவித்து அவர்களை வெளியே அனுப்ப வேண்டும் அல்லது தங்களை முகாமுக்குள் சென்று தேடிப்பார்க்க அனுமதிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரியதையடுத்தே கிண்ணியாவிலும் நாவாந்துறையிலும் நிலைமை மோசமடைந்தது. முகாமிற்குள் சென்று பார்வையிட வேண்டுமென்ற பொதுமக்களின் கோரிக்கை முரட்டுத் தனமானதாக இருந்தபோதும் அவர்கள் இந்தளவிற்கு ஆவேசம் அடைந்ததற்கு காரணம் என்ன? கிண்ணியாவில் வீதிகளில் ரயர்களை எரித்து கடற்படையினரை கற்களால் தாக்கியிருக்கிறார்கள். நாவாந்துறையில் இராணுவத்தினரையும் பொலிஸாரையும் கற்களால் தாக்கியுள்ளனர் பொலிஸாரின் ஜீப் வண்டி தாக்குதலில் சேதமடைந்துள்ளது. மக்கள் இந்தளவிற்கு தீவிரமாக வன்முறையில் இறங்குவதற்கு தாம் நியாயமான ஒரு காரணத்திற்காக செயற்படுகின்றோம் என்ற உந்துதல் தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

அவசர காலச் சட்டத்தை நீடிப்பதற் காகவே அரசாங்கம். வடக்கு கிழக்கில் மர்ம மனிதர்களை ஏவி விட்டுள்ளதாக அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். அவசர காலச் சட்ட நீடிப்புக்கே கிறிஸ் பூதம் என்ற நாடகம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா எம்பி தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவே கிறீஸ் பூதம் என்ற மாயை என தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பி செல்வம் அடைக்கல நாதன் குறிப்பிட்டுள்ளார். அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்து வந்த இந்த குற்றச்சாட்டுக்கள் மக்கள் மத்தியிலும் பரவியிருந்தன. இது முழு உண்மையில்லை என்பது அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் மூலம் அரசினால் வெளிப்படுத்தப்பட்டாலும் மக்கள் மத்தியில் அரசுக்கு இது தொடர்பாக ஏதோவொரு குறுகிய எண்ணம் இருக்கிறது என்ற சந்தேகம் அற்றுப் போகவில்லை.

மர்ம மனிதர்கள் சிறுபான்மை மக்களான தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளிலேயே நடமாடுவதாகவும் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இது தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் கருத்துத் தெரிவித்த போது "மர்ம மனிதர்கள் விவகாரத்தில் நாட்டு மக்கள் சிந்திக்காதவர்களாக நிதானமற்று நடந்துகொள்கின்றனர். மக்கள் வதந்திகளை நம்புகின்றனர்." என்று தெரிவித்திருந்தார். "கிழக்கு மாகாணத்தில் பொத்துவில் பிரதேசத்தில் ஏற்பட்ட பதட்ட நிலையைத் தொடர்ந்து ஜனாதிபதி கேட்டுக்கொண்டதற்கிணங்க அங்கு சென்று உண்மை நிலையை மக்களுக்கு விளக்க முற்பட்டோம் ஆனால் மக்கள் நாம் பொய் சொல்கிறோம் என எம்மீது ஆத்திரம் கொண்டனர். மக்கள் வதந்திகளை நம்பி கலவரம் அடைவது போல் நாங்களும் இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கின்றனர். மர்ம மனிதர்கள் தொடர் பான வதந்திகள் பொது மக்கள் மத்தியில் விரைவாக பரவுவதற்கு ஊடகங்கள் பிரதான காரணமாக அமைந்துள்ளன" எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

பொதுமக்களோ மர்மமனிதர்கள் படையினரின் வாகனங்களில் கொண்டு வந்து இறக்கி விடப்படுவதாகவும் அவர்கள் பனங்கந்துகளுக்குள் நடமாடியதைக் கண்டதாகவும், வீடுகளின் மலசல கூடம், குளியலறைப் பகுதிகளில் மறைந்திருந்ததாகவும் தெரிவிக்கின்றனர். ஆனால், இந்த மர்ம மனிதர்கள் பொது மக்களுக்கு என்ன கெடுதியை இது வரை விளைவித்துள்ளார்கள் என்பதற்குக் கிடைக்கின்ற பதில் மர்ம மனிதர்கள் ஆபத்தானவர்கள் என்ற உருவகிப்பைச் சிதைத்துவிடுகின்றது.

மர்மமனிதர்கள் எங்கேயும் உயிராபத்தை விளைவிக்கவில்லை. மர்மமனிதர்கள் மறைந்திருந்ததாகக் கூறப்படும் வீடுகளிலிருந்து பெறுமதி மிக்க பொருட்கள் சூறையாடிச் செல்லப் படவில்லை. அவர்கள் யாரையும் படுகாயப்படுத்தி ஊனமடையச் செய்துவிட்டதாகவும் தகவல்கள் இல்லை. பெண்களைக் கூட துன்புறுத்தியதற்கான ஆதாரங்களில்லை. ஆட்களைக் கண்டதும் மர்ம மனிதர்கள் தப்பி ஓடிவிடுகின்றார்கள் என்பதே பரவலாக உள்ள செய்தி.

வவுனியாவில் குளியலறைக்குச் சென்ற பெண்ணைக் கண்டதும் அங்கு ஒளிந்திருந்த மர்மமனிதன் தப்பி ஓடிவிட்டான். கோண்டாவிலில் மலசலகூடப் பகுதியில் ஒழிந்திருந்த மர்மமனிதன் அங்கு சென்ற வீட்டு உரிமையாளரை நெஞ்சில் கத்தியால் காயப்படுத்திவிட்டு தப்பி ஓடிவிட்டான் இவ்வாறு தான் பத்திரிகைச் செய்திகள் மர்ம மனிதனின் நடவடிக் கைகள் குறித்துத் தெரிவிக்கின்றன.

இந்த கிறிஸ் பூதங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த பொலிஸ் அதிகாரிகள் இது வதந்தி, அவற்றை நம்ப வேண்டாம் என்றும் களவு கொள்ளைகளில் ஈடுபடும் மோசடிப் பேர்வழிகளின் வேலை என்றும் கூறியிருந்தார்கள் வதந்தி பரப்புவதாக பலரை கைதுசெய்தும் இருந்தார்கள் ஆனாலும் பொதுமக்கள் அரச படையினரே தம்மில் சிலரை மர்ம மனிதர்களாக - கிறிஸ் பூதங்களாக உலவ விட்டிருக்கிறார்கள் என்றும் அவர்களை மக்கள் துரத்திச் செல்லும் போது அருகிலுள்ள பொலிஸ், இராணுவ நிலைகளுக்குள் சென்று தப்பித்துக் கொள்வதாகவும் மக்கள் பரவலாகத் தெரிவிக்கின்றனர் மர்மமனிதர்களைப் பிடிப்பவர்கள் அவர்களைத் தாக்கக் கூடாது அவனைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என இராணுவத்தினரும் பொலிஸாரும் கூறியது பொதுமக்களின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

பொலிஸார் மர்ம மனிதன் தொடர்பிலான சம்பவங்கள் நடைபெற்ற இடங்களில் விசாரணைகளை நடாத்தி உண்மைகளைக் கண்டறிந்து அவை பற்றி பொது மக்களுக்கு தெளிவு படுத்தியிருக்க வேண்டும். அதன் மூலம் மக்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டிருந்த அச்சத்தையும் பீதியையும் போக்கியிருக்க வேண்டும். இதன் மூலம் வதந்திகள் பரவுவதும் தடைப்பட்டிருக்கும். அதனை விடுத்து கைதும், அடி உதையும் மர்ம மனிதனை மேலும் பலம் மிக்கவனாய் ஆக்கியுள்ளது. மர்மமனிதனைத் துரத்திச் சென்றவர்கள் படையினரோடு முரண்பட்டவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள்.' சட்டம் ஒழுங்கு என்ற பேரில் இராணுவத்தினராலும், பொலிஸாராலும் தாக்கப்படும் போது மர்ம மனிதர்களுக்கும் படைத் தரப்புக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக நிலவும் நம்பிக்கை உறுதியாக்கப் படுகிறது. இது தொடர்பாக அரச படை அதிகாரிகளும் பொலிஸ் அதிகாரிகளும் பொதுமக்களை எச்சரிப்பதை விட்டு மர்ம மனிதன் தொடர்பான உண்மைகளை நேர்மையாக வெளிக் கொணர வேண்டும்.

---

## வடக்கு கிழக்கில் 60,000 விதவைகள்

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 59 ஆயிரத்து 500 விதவைகள் இருப்பதாக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த 15.08.2011 வெள்ளிக்கிழமையன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வட மாகாணத்தில் 16936 பெண்களும் கிழக்கு மாகாணத்தில் 42,565 பெண்களும் விதவைகளாக இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

---

## 1,41,000 வீடுகள் பற்றாக்குறை

வட மாகாண மக்களுக்கு ஒரு இலட்சத்து நாற்பத்தோராயிரம் வீடுகள் தேவை என்கிறார் அமைச்சர் வீரக்கோன். மீள்குடியேறிய மக்களிற் பெரும்பான்மையானோர் தற்காலிக வீடுகளிலேயே குடியிருப்பதாகவும் இவர்களுக்கு நிரந்தர வீடு வழங்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

---

## கடற்புலிகளின் இடத்தில் கடற்படை முகாம்

நாச்சிக்குடாவில் ஒரு கடற்படை முகாமை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ திறந்து வைத்துள்ளார். இந்த முகாம் மன்னாருக்கும் யாழ்குடாநாட்டுக்கும் இடையேயுள்ள கடற்பகுதியைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு அவசியமெனக் கருதப்படுகின்றது.

வடமேற்குக் கரையில் அமைந்துள்ள நாச்சிக்குடாவில் முன்னர் கடற்புலிகள் தமது பிரதானமான முகாம் ஒன்றை வைத்திருந்து இக்கடற்பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

வடக்கு கிழக்கில் இப்போது சுமார் ஒரு லட்சம் பேருக்கு மேல் இராணுவத்தினர் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவர்களுக்கு தற்போது யுத்தம் என்னும் வேலை இல்லாமையினால் அவர்களை வடக்கு கிழக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதாக அரசாங்கம் சொல்கிறது. அது நல்ல விடயமே. சில இடங்களில் இராணுவத்தினர் தமது சம்பளத்தில் பங்களித்து வீடுகளைக் கட்டி யுத்தத்தால் வீடிழந்து போன சிலருக்கு வழங்கியிருப்பது மிகவும் பாராட்டுக்கு உரிய ஒன்றே. மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து நிலக்கண்ணி வெடிகளை நீக்குவதில் இராணுவத்தினர் அளித்த பங்களிப்பையும் நாம் நன்றியோடு பார்க்கிறோம்,


ஆனால் அதற்காக இராணுவத்தினர் தமது வல்லமையையும் வாய்ப்புக்களையும் பாவித்து ஆங்காங்கே சிற்றுண்டிச் சாலைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான ஓய்விட வியாபாரங் களில் ஈடுபடுவது அபிவிருத்தி வேலையல்ல. அது மாறாக சிறு வியாபார முயற்சியாளர்களினது வயிற்றிலடிப்ப தோடு அத்தொழில்கள் மூலம் வேலை வாய்ப்புக்களைப் பெறக் கூடிய தமிழர்களுக்கான சந்தர்ப்பங்களைப் பறிக்கும் நடவடிக்கையாகவே காணப்படுகிறது.

இராணுவத்தினர் எந்தவித சட்ட முறையையும் கடைப்பிடிக்காமல் தமது எண்ணப்படி எந்தவிதமான இராணுவத் தேவைகளுக்காகவும் அரச காணிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது இந்த நாட்டில் எழுதப்படாத ஒரு சட்டமாகிவிட்டது. அதனது விரிவாக்கமாக இன்று இராணுவத்தினர் எந்தவொரு அரச காணியிலும் அல்லது பயன்படுத்தப்படாத நிலையிலிருக்கும் தனியார் காணியிலும் தாம் விரும்பியபடி கடைகட்டி வியாபாரம் செய்ய அதிகாரமுடையவர்களாகி விட்டார்கள். அதைத் தடுக்கும் சக்தி எந்தவொரு உள்ளூராட்சிக்கும் இல்லாது போய்விட்டது, அதைத் தட்டிக் கேட்கும் கடமையை எந்தவொரு அரச சிவில் நிர்வாக அமைப்பும் செய்யவில்லை.

இராணுவமானது மணல் வியாபாரம், தோட்ட விவசாயம், கால்நடை விவசாயம், பலசரக்குக் கடை வியாபாரம் மற்றும் ஹோட்டல்கள் நடத்துதல் உட்பட சுற்றுலாத் துறை வியாபாரங்களில் ஈடுபடல், இராணுவ அதிகாரிகளைக் கொண்டு இராணுவ முகாம்களுக்கு அழைத்து பல்கலைக் கழக மாணவர்களுக்கு தலைமைப் பயிற்சிகளை வழங்குதல், கடற்படையானது சரக்கு மற்றும் பயணிகள் கப்பற் போக்குவரத்து மற்றும் மீன்பிடித் தொழில் ஆகியவற்றில் ஈடுபடல், விமானப் படையானது பயணிகள் விமானப் போக்குவரத்து வியாபாரத்தில் ஈடுபடல், நகரங்களின் பராமரிப்புக்களும் நிர்மாணங்களும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரத்துக்கே உட்பட்டிருத்தல், சமூகத்தில் நடாத்தப்படும் சகல கொண்டாட்டங்களிலும் விழாக்களிலும் சமூக நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றவென அவ்வப் பகுதி இராணுவ அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படல் வேண்டும் என்ற கட்டாயம். இழவு வீடாக இருந்தாலென்ன கலியாண வீடாக இருந்தாலென்ன அந்தந்தப் பகுதி இராணுவ அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட வேண்டுமென்ற கட்டாயம், சாதாரண சட்டம் ஒழுங்கு விவகாரங்களிலும் இராணுவம் தலையீடு செய்யும் அதிகாரம் கொண்டிருக்கின்றமை என ஒரு நாடு இருந்தால் அந்த நாடு இராணுவ ஆட்சி நாடு என்ற இலக்கணத்துக்குள்ளே தானாகவே வந்து விடும்.

பாதுகாப்பு அமைச்சானது சில பொருளாதார உற்பத்தித் தொழில்களை நடத்தக் கூடாதென்றில்லை. ஆனால் இராணுவ ரீதியான தேவைகளோடும், இராணுவரீதியான கருவிகள், வாகனங்கள் மற்றும் அவை தொடர்பான பொருட்களின் உற்பத்திகளோடு தொடர்புபட்டதாக இருக்க வேண்டும். அதுவும் அவை அரசின் பொதுத்துறைத் தொழில் நிறுவனங்களுக்குரிய முறைகளிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும். இராணுவ அதிகாரிகளை முதலாளிகளாகவும் இராணுவ வீரர்களை தொழிலாளர்களாகவும் கொண்டு தொழில்களை நடத்துவது என்பது நாட்டிலுள்ள மக்களாட்சி முறைக்குப் பொருத்தமானது அல்ல. மாறாக அதனை உற்பத்தி மற்றும் வாத்தகத் துறையில் மேற்கொள்ளப்படும் இராணுவமயமாக்கமென்றே கூற வேண்டும்.

## அன்பார்ந்த நண்பர்களே!



## ஆற்றல்மிகு தோழர்களே!

யுத்தம் ஒன்று நடக்கிற பொழுதே பொலிஸார் இராணுவத்தினருக்குத் துணையாக இருக்க வேண்டும். ஆனால் யுத்தம் முடிவடைந்து விட்டால் பொலிஸார் கேட்கிற போதே இராணுவத்தினர் பொலிஸாருக்குத் துணையாக இருக்க வேண்டும். இன்றைய வடக்கு கிழக்கில் யுத்த சூழ்நிலை இல்லை. ஆனாலும் வடக்கு கிழக்கின் சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளில் எழுபத்தைந்து சதவீதத்துக்கு மேல் இராணுவத்தினரின் தலையீடே உள்ளது. பொலிஸ் நிலையத்துக்கு யாராவது பொதுமகன் தேடி வந்து நீதி கேட்டு வாக்கு மூலம் கொடுத்தால் அதனை ஏற்பது அத்துடன் நகரங்களில் வீதிப் போக்குவரத்துக்களைக் கவனிப்பது என்பதற்கப்பால் பொலிஸாருக்கு எந்த அதிகாரமும் யுத்தம் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை.

வடக்கு கிழக்கை தற்போது கலக்கிக் கொண்டிருக்கும் மர்ம மனிதர்கள் - கிறீஸ் மனிதர்கள் விவகாரத்தில் இராணுவமே முழு அதிகாரத்தையும் தனது கையில் எடுத்து வைத்துக் கொண்டுள்ளது. பொதுமக்கள் மர்மமாக நடமாடும் மனிதர்களைப் பிடித்து அடித்தால் இராணுவத்தினர் ஏன் இவ்வளவு தூரம் மக்கள் மீது ஆத்திரம் கொள்ள வேண்டும்.! மக்கள் ஒரு சந்தேகநபரைப் பிடித்தால் அவனை அடிப்பது சரியா பிழையா என்ற விவாதம் ஒருபுறமிருக்க, அப்படியொரு விடயத்தை கேள்விக்கு உள்ளாக்குவதுவும் அது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதுவும் பொலிஸாரின் அதிகாரத்துக்கு உட்பட்டதே தவிர இராணுவத்தினருக்கு உரிய வேலையல்ல. இராணுவத்தினர் இவ்விடயத்தில் தலையிட்டு சட்டத்தைத் தமது கையில் எடுத்துக் கொள்வதுவும் சட்ட விரோதமே.

தென்னிலங்கையில் பொலிஸ்தானே இவ்விவகாரங்களைக் கவனிக்கிறது. பொதுமக்கள் சட்டத்தைக் கையில் எடுப்பது குற்றமென்றால் இராணுவத்தினரும் தமது அதிகாரத்துக்கு உட்படாத விடயங்களில் சட்டத்தைக் கையிலெடுப்பது குற்றம்தானே! இராணுவத்தினர் கையில் வலிய ஆயுதங்கள் இருப்பதால் அவர்கள் எல்லா அதிகாரங்களும் படைத்தவர்கள் ஆவார்களா! பெரும் உயிர்த்தியாகங்கள் மற்றும் உடற் தியாகங்கள் செய்து புலிகளை வென்றவர்கள் இராணுவத்தினரே என்பதால் வடக்கு கிழக்கு பிரதேசங்கள் இராணுவத்தினரின் தனியாட்சிக்கு உரிய பிரதேசங்களாக கொள்ளப்பட்டு விட்டனவா! அப்படியானால் சட்ட விரோத புலிகளுக்கும் சட்டபூர்வமான அரசபடைகளுக்கும் என்ன வித்தியாசம். என்ற கேள்வி இங்கு எழுவது இயல்பே.

யுத்தம் முடிவடைந்து இத்தனை காலமாகியும் பொதுமக்களின் சாதாரண சட்ட ஒழுங்கு விவகாரங்கள் அனைத்திலும் இராணுவம் தலையிடுவதாலேயே வடக்கு கிழக்கில் இத்தனை குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இதனாலேயே இங்கு கடந்த ஆண்டில் நடந்த தொடர் களவுகள் மற்றும் மர்மக் கொலைகள் மற்றும் இந்த ஆண்டில் மக்களைக் கலக்கி வரும் மர்ம மனிதர்கள் விவகாரம் என்பவையெல்லாம் வடக்கு கிழக்கில் உள்ள இராணுவத்தினரின் திட்டமிட்ட நடவடிக்கைகளே என்று மக்களை நம்பப்பண்ணுகிறது.

நாட்டின் அபிவிருத்தியிலும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதிலும் இராணுவத்தினர் பங்களிப்பு செலுத்தலாம் என்றால் அதனை தென்னிலங்கையிலும் செய்யலாமே! தென்னிலங்கையில் அவ்வாறு செய்வதற்கு சிங்களத் தலைவர்கள் விரும்பமாட்டார்கள், சிங்கள மக்களும் அதனை ஏற்க மாட்டார்கள். இராணுவத்தினர் முழுக்க முழுக்க சிங்களவர்களை மட்டுமே கொண்டதாக இருந்தும் அதனைத் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் வாழும் பகுதிகளின் அபிவிருத்திக்கும் சட்டம் ஒழுங்குக்கும் பயன்படுத்துவதற்கு விரும்பாத அரச நிர்வாகம் தமிழர்களின் பகுதிகளுக்கு மட்டும் பயன்பாடுடையது என்பது ஏற்கக் கூடிய கருத்தல்ல. வடக்கு கிழக்கு மக்களின் புனர்வாழ்வு, வடக்கு கிழக்கின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் சிவில் நிர்வாகத்துக்கே உரிய விடயங்கள். அதில் இராணுவத்தினர் தலையிடுவதற்கான - ஆதிக்கம் செலுத்த முற்படுவதற்கான எந்தவித அவசியமும் இப்போது இல்லை. பொலிஸும் சிவில் நிர்வாகத்தின் ஒரு பகுதியே. பொது மக்கள் எந்த சமூகத்தவராயினும் அபிவிருத்தி மற்றும் நிர்வாக விடயங்களில் பச்சை உடையணிந்த இராணுவத்தினரின் ஈடுபாட்டை – தலையீட்டை ஏற்பதில்லை ஆனால் காக்கி உடையணிந்த பொலிஸாரை ஏற்றுக் கொள்வார்கள் என்பது பொதுவான அனுபவமாகும்.

அரசு தன்னிடம் உள்ள இராணுவம் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்டவர்களைக் கொண்டிருக்கிறது; யுத்தம் முடிவடைந்து விட்டதால் அவர்களுக்கு வேறு வேலைகளில்லை; அவர்களை உடனடியாகக் குறைக்க முடியாது; எனவே அவர்களை யுத்தத்தால் சீரழிந்துள்ள வடக்கு கிழக்கினை விரைவாக புனரமைப்பதற்கு உரிய மனிதவளமாகப் பயன்படுத்தலாம் என உண்மையிலேயே அரசாங்கம் ஒரு கொள்கையைக் கொண்டிருக்குமாயின் இராணுவத்தினரை அவசியமான கட்டுப்பாடுகளோடும் உரிய கண்காணிப்புகளோடும் அகதிகள் அனைவரதும் உடைந்த வீடுகள் அனைத்தையும் உடனடியாக புனரமைப்பதற்கு உதவியாக ஈடுபடுத்தியிருக்கலாம், இந்தியா மற்றும் உலக நாடுகள் உதவிய விவசாய இயந்திரங்களை கிடப்பில் போடாமல் இராணுவத்தைக் கொண்டு காடாகிப் போய்க்கிடக்கும் விவசாய நிலங்களில் மக்கள் மீண்டும் விரைவில் தமது விவசாய நடவடிக்கைகளை சுறுசுறுப்புடன் மேற்கொள்ளும் வகையாக அந்த நிலங்களிருந்து பயனற்ற மரங்களையும் பற்றைகளையும் நீக்கி பண்படுத்திக் கொடுத்திருக்கலாம், அந்த விவசாயிகளின் நிலங்களை உழுது கொடுத்திருக்கலாம், அவர்களுக்கு அறுவடை காலத்தில் துணையாக உதவி செய்திருக்லாம், அறுவடை செய்த நெல்லை மலிவான செலவில் சூடடித்துக் கொடுத்ததிருக்கலாம். அவ்வாறெல்லாம் நடந்திருந்தால் இராணுவம் மக்களுக்குத் துணையாக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என மகிழ்ச்சி கொள்ளலாம். அப்படிப்பட்ட உதவிகளைக் கூட மக்கள் எதிர்பார்க்காத போது வடக்கு கிழக்கின் அபிவிருத்தியில் இராணுவத்தினரை ஈடுபடுத்த அரசாங்கம் முயல்வது அவசியமற்ற ஒன்றாகும். அத்துடன் எதிர்மறையான விளைவுகளுக்கே அது வழிவகுக்கிறது.

இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் அரசு அக்கறையுடன் செயற்படுவது உண்மையாயின் முதலில் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் இராணுவத்தின் ஈடுபாட்டை – தலையீட்டைக் குறைப்பது அவசியமானதொரு விடயமாகும். சாதாரண மக்கள் மத்தியில் இராணுவத்தினரை கட்டற்ற வகையில் நடமாட விடுவதனால் பொதுமக்கள் அநாவசியமாக பல்வேறு தொல்லைகளுக்கும் சிரமங்களுக்கும் ஆளாகின்றனர். ஆயுதம் தரித்த இளைஞர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பொதுமக்களின் எந்தவொரு வீட்டுக்குள்ளும் எப்பொழுதும் பூரலாம், யாரிடமும் எதையும் தரும்படி கேட்கலாம் என்னும் வாய்ப்பு இருந்தால் அதன் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை அனைவராலும் புரிந்து கொள்ள முடியும் அதனை இங்கு விபரிக்க வேண்டிய அவசியமில்லை. இதனால் நாளாந்தம் இராணுவத்தினர் மீது பொதுமக்களுக்கு வெறுப்பே அதிகரிக்கிறது. இவை இனங்களுக்கிடையே மேலும் பகைமை உணர்வுகளை வளர்க்கும் நடவடிக்கைகளே என்பதை அரசு புரிந்து விரைவில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும்.

இப்படிக்கு

உங்கள் தோழன் - நண்பன்

**அ.வரதராஜப்பெருமாள்**

# 2011ல் உள்ளூராட்சிகளுக்கான தேர்தல் முடிவடைந்து விட்டது

# வென்றவர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும்

## இல்லாத அதிகாரங்களுக்காகப் போராடுவது ஒருபுறம் – முதலில் இருப்பவற்றோடு சாக்குப்போக்கின்றி சேவையாற்ற வேண்டும்

யாழ் மாவட்டத்தில் 1998 ஆம் ஆண்டு உள்ளூராட்சி தேர்தல் இடம்பெற்றது. நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி தேர்தல் பதின்மூன்று வருடங்களின் பின் இப்போது நடைபெற்றிருக்கின்றது. யாழ் மாநகர சபைக்கான தேர்தல் ஏற்கனவே நடைபெற்றமையால் யாழ் மாநகரசபை தவிர்ந்த 16 உள்ளூராட்சி சபைகளுக் கான தேர்தல்கள் யாழ் மாவட்டத்தில் தடங்கல்கள் தாமதங்களைக் கடந்து 23.07.2011 அன்று நடந்து முடிந்திருக்கின்றது.

**மோகன். க. சிவராசா**

வட மாகாணத்தில் யாழ்ப்பாணம் மாவடடத்தில் 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 சபைகளுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 1 சபைக்கும் நடாத்தப்பட்ட தேர்தலில் 17 சபைகளின் நிர்வாக அதிகாரத்தை தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனதாக்கிக் கொண்டுள்ளது. யாழ் மாவட்டத்தின் தீவுப்பகுதியில் உள்ள 3 சபைகள் மட்டும் ஈபிடிபியின் வசமாகியுள்ளன.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் பலர் நேரடியாகவும், மறைமுகமாகவும் அச்சுறுத்தப்பட்டனர் என்ற குற்றச்சாட்டுகள். தேர்தல் பிரச்சாரங்களுக்கு பலத்த இடையூறுகள் விளைவிக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டுகள். அளவெட்டியில் நடைபெற்ற முதலாவது கூட்டத்திலேயே குழப்பம் விளைவிக்கப்பட்டது. இந்த சம்பவத்தில் இராணுவத்தினரே நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தமை. மேலும் வலிகாமம் தெற்கு மேற்கு பிரதேசசபை வேட்பாளர் ஒருவரின் வீட்டின் கேற்றில் வெட்டப்பட்ட நாயின் தலை ஒன்று செருகி வைக்கப்பட்டிருந்தமை. மற்றொரு வேட்பாளரது வீட்டின் முன்னால் மலர்வளையம் வைக்கப்பட்டிருந்தமை. இவற்றின் மூலம் வேட்பாளர்களை அச்சுறுத்தி போட்டியிலிருந்து ஒதுங்கச்செய்யலாம், பிரச்சாரத்தில் அவர்களின் தீவிரத்தை குறைக்கலாம் என இந்த அச்சுறுத்தல்களை மேற்கொண்டவர்கள் எதிர்பார்த்திருக்கலாம் ஆனால் அதற்கு மாறாக கூட்டமைப்பிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதல்கள், மிரட்டல்கள் அனைத்தும் த.தே. கூட்டமைப்புக்கே பெரும் பிரச்சாரமாகவும், அனுதாபமாகவும் மாறியிருந்தது.

யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதால் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருக்கும் புலிகளின் தீவிர ஆதரவாளர்கள் புலிகளைத் தோற்கடித்த இந்த அரசுக்கு எதிரான உணர்வை வெளிப்படுத்தவும், தமது கோரிக்கைகளின் இருப்பு, தொடர்ச்சி என்பவற்றைப் பேணவும் கூட்டமைப்பை ஒரு கருவியாக கருதுகிறார்கள் என்பது வெளிப்படை. 1989 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஈரோஸ் அமைப்பின் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கு ஈரோஸ் அமைப்புக்கு இருந்த ஆதரவல்ல காரணம் என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை அதேபோல ஒரு மறைமுக இயக்குவிப்பு த.தே.கூவுக்கு இந்த தேர்தலிலும் செயற்பட்டிருக்கின்றது.

கூட்டமைப்பு தேர்தலில் பெற்றுக் கொண்ட வெற்றியை எங்களோடு இருந்து எங்களுக்காக உயிர் தந்த அனைத்து உறவுகளுக்கும் "சமர்ப்பணம் செய்கின்றோம்" என கூட்டமைப்பின் கிளிநொச்சி செயலகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும் மற்றும் வேட்பாளர்களும் பத்திரிகைக்கு வழங்கியுள்ள "தலை வணங்குகின்றோம்" என்ற தலைப்பிலான வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விளம்பரம் ஒன்றில் "எல்லாவற்றுக்கும் மேலாக எங்களில் நாங்களாக இருந்து எங்களை இயக்குகின்ற எங்களோடு இருந்து எங்களுக்காக உயிர் தந்து கனவுகளோடு விழி மூடித் தூங்கும் எம் உறவுகளுக்கும் இந்த வெற்றியை காணிக்கையாக்குகின்றோம்." என்றிருந்தது. இவை யாரைத் திருப்திப்படுத்துவதற்காக என்பது புரிந்துகொள்ள முடியாத ஒன்றல்ல.

### ஈபிடிபியின் பலங்கள்

ஈபிடிபி அமைப்பு தனது ஆட் பலத்தைக் கொண்டிருந்ததுடன், பிரச்சாரத்திற்கு தனது கையில் பத்திரிகை ஒன்றையும், அரச ஆதரவுடன் வானொலி ஒலிபரப்பு மற்றும் தொலைக் காட்சி ஒளிபரப்புகள் மூலமாக மக்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்புக்களையும் கொண்டிருந்தது. அத்துடன் அதற்கு படைத்தரப்பு பக்கபலமாயிருந்ததுடன், பொலிஸாரும் அதற்குச் சார்பாக கண்டும் காணாதுமாக நடந்துகொண்டதுவும் எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும்.

இது மாத்திரமல்லாமல் ஜனாதிபதி உட்பட பெருந்தொகையான அமைச்சர்கள் பலர் வடபகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் மிகுந்த கரிசனை எடுத்துக்கொண்டனர். தேர்தல் விதிமுறைகளுக்கு முரணானதாயினும் வாக்காளர்களைக் கவரும் நோக்கில் அமைச்சர்கள் பலர் பல்வேறு வேலைத் திட்டங்களுக்கான அடிக்கல்லை நாட்டியும், பெயர்ப்பலகைகளை திரை நீக்கம் செய்தும் பெரும் அபிவிருத்தி திட்டங்கள் நடைபெறவிருப்பதாக முன்னறிவிப்பும் செய்தனர். சைக்கிள்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் மற்றும் காசோலைகள் என மீளக்குடியமர்ந்தவர்கள், சமூர்த்தி பயனாளிகள், யுத்தத்தில் தொடர்புடையவர்களுக்கான புனர்வாழ்வு என வாக்காளர்களை வசியப்படுத்தும் பல்வேறு இனாம்கள் வழங்கப்பட்டன.

இவற்றோடு, கடந்த காலங்களில் இடம்பெற்ற தேர்தல்களில் நடைபெற்றது போன்று கூட்டமைப்பின் கருத்துக்களுக்கு மாற்றான கருத்து நிலைப்பாடுள்ளவர்களின் வாக்குகளை பிரிந்துவிடும் வகையில் வேறெந்த கட்சிகளும் இத்தேர்தலில் போட்டியிடாததுவும் ஈபிடிபிக்கு சாதகமான அம்சமாக இருந்தன. ஆயினும் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் 47 ஆயிரத்து 622 வாக்குகளை பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட ஈபிடிபி இந்த தேர்தலில் நாற்பத்தியேழாயிரத்து இருநூற்றிஐம்பது (47250) வாக்குகளையே பெற்றுள்ளது. ஆனால் பாராளுமன்றத் தேர்தலில் அறுபத்தி ஐந்தாயிரத்து நூற்றிப்பத்தொன்பது (65119) வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தியேழு (124967) வாக்குகளைப் பெற்றுள்ளது.

ஆட்கள் பலம், பணபலம், பிரச்சார பலம் என அனைத்துப் பலங்களையும் கொண்டிருந்த போதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட ஈபிடிபி தேர்தலில் எதிர்பார்த்த வெற்றியைப் பெறமுடியாமைக்கு காரணம் என்ன என்பது இங்கு ஆய்வுக்கு உரிய விடயமாகும்.

### அரசின் மீதான வெறுப்பு எதனால் உருவானது

புலிகளுக்கு எதிரான யுத்தமும், அதன்போது கொல்லப்பட்டவர்கள், காணாமற் போனவர்கள், சரணடைந்தவர்கள், தடுத்துவைக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்படாமை, உயர் பாதுகாப்பு வலயம், சிவில் வாழ்க்கையில் இராணுவத்தின் பிரசன்னம், அரசியற் தீர்வின்மை, சிங்களக் குடியேற்றங்களுக்கான முஸ்தீபுகள், தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் புதிதாக பௌத்த வணக்கதலங்கள் அமைக்கப்படுகின்றமைகள், வீதிகளுக்கு சிங்களத்தில் பெயரிடுதல் என்பன தமிழ் மக்கள் மத்தியில் அரசுக்கு எதிராக உருவாகியுள்ள வெறுப்பிற்குக் காரணங்களாகும்.

மக்களிடம் அரசுக்கெதிரான உணர்வை ஏற்படுத்தியிருக்கும் இதே காரணங்களுக்காக தாம் மட்டுமே அரசை எதிர்த்துக் குரல் கொடுத்து வருவதாகவும் இவற்றுக்குத் தீர்வு காணப் போராடி வருவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களை நம்ப வைத்துள்ளமை மறுக்க முடியாத ஒன்றாகும்.

அரசுக்கு ஆதரவானவர்களுக்கு வாக்களிக்கக் கூடாதென வைராக்கியம் கொண்டிருந்த மக்களுக்கு ஒரே தெரிவாக கூட்டமைப்பு மட்டுமே இருக்கிறது. தமிழ் மக்களின் இந்த எதிர்ப்பு அலை அபிப்பிராயத்தை வாக்குகளாக மாற்றும் உபாயம் கூட்டமைப்பிற்கே தெரிந்திருக்கிறது. எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்ப்பது போல அது தன் பிரச்சாரத்தை மேற்கொண்டது. இதனைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கோசங்களிலிருந்து நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

ஐ நா மன்ற ஆணைக்குழுவால் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பினால் அரசுக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை உலகம் எங்களைத் திரும்பிப் பார்த்து எம்மைப்பற்றி பேச ஆரம்பித்துள்ள இத்தருணத்தில் நாம் எமது பலத்தைக் காட்டவேண்டும் அதற்காக தமிழ் இன அழிப்பைச் செய்தோரைத் தோற்கடிப்போம் என்ற உணர்வு இங்கு எல்லாவற்றிற்கும் மேலாக இருந்ததைக் காணலாம்.

போர் என்று இங்கு தமிழர் நிலமெல்லாம் எல்லாம் கொள்ளப்பட்டது. பாதுகாப்பு வலயங்கள் இன்றும் பல இலட்சம் தமிழ் மக்களை வீடிழந்து சொந்த நிலமிழந்து சொத்திழந்து உயிர்கள் அழிந்து நிற்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. போர் முடிந்தும் எங்கள் நிலத்தில் இராணுவமே குடியிருக்கிறது. முகாம் அமைத்துக் குடியேற்றம் நடக்கிறது அரசே எங்கள் நிலத்தை எங்களிடம் விட்டுவிடு! தெருவில் தமிழர் நிற்க அவர்கள் நிலங்களில் தெற்குச் சிங்களவர் குடிபுகுந்து நெல் விளைக்கின்றனர். நம் தமிழ் மீனவர் கரையிழந்து கடலிழந்து நிற்க எமது கடலில் தென் இலங்கைச் சிங்களவர் கடற்படையினரின் உதவியுடன் சங்கும் கடலட்டையும் இறாலும் மீனும் பிடித்து வளமான வணிகம் செய்கின்றனர். "இவையே தமிழர்கள் மத்தியில் இன்று வலிதாக இருக்கும் கருத்துக்கள். அரசு இவற்றை மறுக்கவும் இல்லை" மாற்றும் முயற்சிகளில் ஈடுபடவும் இல்லை

### தேர்தல் தோல்வி அரசுக்கு நெருக்கடியா?

வடக்கு மாகாணசபை தேர்தலை நடத்துவதா? வேண்டாமா? என ஆழம் பார்க்கவும், தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை வலியுறுத்தும் உலக நாடுகளின் அழுத்தங்கள் மற்றும் யுத்தத்தில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் குறித்து சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை வலுக்குறைக்கவும் தேர்தல் வெற்றி உதவும் என அரசு கருதியிருக்கலாம். அதற்காக அரசு மிகப்பெரும் பிரயத்தனத்தை எடுத்திருந்த போதும் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. இது அரசுக்கு பலத்த ஏமாற்றத்தை அளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

தேர்தல் வெற்றியின் மூலம் ஈட்டிக் கொள்ள நினைத்தவை எட்டாக் கனியானபோதும் அரசுக்கு அனுகூலங்கள் இல்லாமல் இல்லை. சுனாமியால் இடம்பெயர்ந்த மக்களைப் பார்வையிட வந்த தென்னிலங்கைத் தலைவர்களை விளக்குமாறு கொண்டு விரட்டிய தமிழர்கள் மத்தியில் டசின் கணக்கில் அமைச்சர்கள் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடும் அளவிற்கு நிலமையை மாற்றியிருப்பது குறித்த பெருமிதம் சிங்கள மக்கள் மத்தியில் அரசின் மதிப்பை அதிகரிக்கச் செய்திருக்கும் என்பது நிஜம். அரசைப் பொறுத்தவரையில் வடக்கின் தேர்தல் களம் ஒரு பரிசோதனைச்சாலை மட்டுமே. இதன் வெற்றி தோல்விகள் ஆட்சி அதிகாரத்தில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தப்போவதில்லை. போனால் கல்லு வந்தால் முயல் என்பதே அரசின் யுக்தியாகும்.

*(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க...)*

### காலிமுகத் திடலில் சீன இராணுவத்தின் ஐந்து நட்சத்திர ஹோட்டல்

சீன விமான தொழில்நுட்ப ஏற்றுமதி இறக்குமதி கூட்டுத் தாபனம் இலங்கையில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றைக் கட்டுவதற்காக இலங்கை சுற்றுலாத்துறை அதிகாரசபை ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. காலி முகத்திடலுக்கு முன்னால் முன்னர் இராணுவத் தலைமையகத்திற்கு உட் பட்டிருந்த நிலம் இதற்காக வழங்கப்படவுள்ளது. அதற்குப் பக்கத்தில் ஏற்கனவே 10 ஏக்கர் நிலம் சீன ஹோட்டல் நிறுவனமான சாங்கிரி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிதாகக் கட்டப்படும் கொழும்பு நகர விரிவாக்கம் சீனாவின் முதலீட்டுக்கே உட்படுத் தப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்ட. . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்துள்ள அச்ச நிலையைப் போக்குவதற்கும், இது தொடர்பாக அரச படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள அத்துமீறல்களை விசாரிப்பதற்கான குழுவை அமைத்து குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளையும் விரைந்து முன்னெடுத்தல் வேண்டும்.

2. தமிழ் முஸ்லீம் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கான உறுதிகளையும் மற்றும் அரச காணிகளில் புதிதாகக் குடியேறி இருப்போருக்கான காணி அனுமதிபத்திரங்களையும் வழங்கல், காணி அனுமதிப்பத்திரங்களை மாற்றல், பிரதேச செயலகங்கள் எதிர்நோக்கும் காணிப்பிரச்சினைகளைத் தீர்த்தல், மேட்டுநில பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள காணிகளை வழங்கல், வளமுள்ள காணிகளை நீண்டகால குத்தகைக்கு பிறருக்கு வழங்குதல், மேய்ச்சல்தரைக் காணிகளை வழங்குதல் போன்றவை தொடர்பாக உள்ள காணிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். கிழக்கு மாகாணசபையால் முஸ்லீம் பகுதிகளுக்கு மட்டும் காணிப் பிரச்சினைகள் தொடர்பாக நடத்தப்பட்ட நடமாடும் சேவையானது தமிழ் பகுதிகளிலும் நடத்தப்படல் வேண்டும்.

**பெரிய நாடுகளிடம் நேர்மையில்லை**

**மஹிந்த வருந்துகிறார்**

சில உலக நாடுகளும் சர்வதேச நிறுவனங்களும் மனித உரிமைக் குழுக்களும் யுத்தக்குற்றங்கள் மற்றும் போரின் போது ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாக தத்தமது வசதிக்கேற்ப வெவ்வேறு அர்த்தங்களைச் சொல்கின்றன என்கிறார்.

வல்லமை பொருந்திய பெரிய நாடுகள் ஒரு விளக்கத் தையும் இலங்கை போன்ற சிறிய நாடுகள் தொடர்பாக வேறு விளக்கங்களையும் இந்த சர்வதேச நிறுவனங்களும் நாடுகளும் கடைப்பிடிக்கின்றன என்று வருத்தப் படுகின்றார்.

3. விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் மற்றும் பிரதேச ரீதியாக நெற் களஞ்சியங்களையும், அலுவலகங்களையும் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு மாவடி ஓடை பாலத்தை அமைப்பதற்கும் உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும்.

4. மாவட்டத்திலுள்ள விசேட தேவையுடையோர்களுக்கான உதவிகள் குறிப்பிட்ட சிலருக்கே வழங்கப்பட்டு வருகின்றன. சுமார் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட விசேட தேவையுடையோர் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ளனர். எனவே அவ்வுதவிகளை அனைவருக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையில் உள்ள குறைபாடுகளைத் தீர்த்து வைப்படுவதோடு இப்பகுதிகளுக்கான ஏனைய தேவைகளும் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.

6. பிரதேச ரீதியாக திணைக்கள அலுவலகங்கள் அமைப்பதற்கு அரச காணியும், நிதியும் வழங்கப்படல் வேண்டும்

7. இம் மாவட்டத்தில் 15,000 இற்கும் மேற்பட்ட விதவைகள் உள்ளனர். இவர்களில் குறிப்பிட்ட சிலருக்கே அரச உதவித் திட்டங்கள் சென்றடைந்துள்ளன. பலருக்கு இத்திட்டங்களால் எந்தவித பயனும் கிட்டவில்லை. எனவே விதவைகளுக்கு உரிய உதவிகள் உடனடியாகக் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதோடு விதவைகளைக் கடனாளிகளாக மாற்றுகின்ற திட்டங்களைத் தடுத்து நிறுத்துதல் வேண்டும்.

8. யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்தவர்களுக்கு அளிக்கப்பட்ட உத்தரவாதங்கள் பல இன்னமும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. குறிப்பாக மாவட்டத்திற்குள் இருந்து மாவட்டத்திற்குள்ளும், ஏனைய மாவட்டங்களுக்கும் சென்று அகதிகளானவர்கள் பெரும்பாலும் தத்தமது இடங்களில் மீளக்குடியேறி விட்டார்கள். இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்றவர்களும் மீளக்குடியமர ஆரம்பித்துள்ளனர். இவர்களின் அவசியத் தேவைகளுக்கான கொடுப்பனவுகள் உரிய அளவில் வழங்கப்படும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவில்லை.

9. வருடாந்த வாகன அனுமதி பத்திரம் பெறுவதிலுள்ள பிரச்சினைகள் மற்றும் மாசுக் கட்டப்பாட்டுச் சான்றிதழைப் பெறுவதற்காக உள்ள புகைபோக்கியைப் பரிசோதிக்கும் நடைமுறையில் உள்ள குறைபாடுகள் ஆகியவை வாகனங்களை வைத்திருப்போரின் நலன்களை பாதிப்பனவாக உள்ளன. இவ்விடயங்களைச் சிரமமின்றியும் குறைவான செலவுடனும் வாகனச் சொந்தக்காரர்கள் பெறுவதற்கு அவசியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

10. காட்டு யானைகளின் தொல்லையால் வீடுகள், விவசாயம் மற்றும் உயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு உரிய நட்டஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதோடு நிறைவேற்றி முடிக்கப்படாமல் உள்ள பாதுகாப்பு வேலிகளை விரைவாக செய்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். .

**அனைவரும் ஒன்றுபடுவோம்**

**அமைச்சர் பசில்**

அபிவிருத்திக்காக அனைத்துக் கட்சிகளையும் அரசாங்கத்துடன் ஒன்றுபடக் கேட்கிறார் அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்த வருடம் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்காக 510 கோடி ரூபாய்களையும் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்காக 210 கோடி ரூபாய்களையும் அரசாங்கம் ஒதுக்கியிருப்பதாகக் கூறியிருக்கிறார்.

இதுகாலவரை அரசாங்கப் பிரதிநிதிகளினூடாகவே அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்போது ஏனைய கட்சிகளும் அரசாங்கத்துடன் ஒன்று பட்டு நின்று இப்பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் இப்பிரதேச மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் முன்வரவேண்டும் எனக் கூறியுள்ளார்.

11. மாவட்டத்தில் நடக்கின்ற அரசாங்க வேலை ஒப்பந்தங்களில் பெரும்பாலானவை லஞ்சம் வழங்குபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன. இதை நிவர்த்தி செய்து ஒப்பந்தங்களுக்கான அழைப்புகளும் பரிசீலனைகளும் வெளிப்படையாக நடத்தப்படுவதோடு, அரசாங்க வேலை ஒப்பந்தங்கள் அனைத்து ஒப்பந்தக்காரர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும் வகையாக இருப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். ஒருபக்கச்சார்பாக ஒப்பந்த வேலைகள் வழங்கப்படும் நடைமுறை உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

12. உள்ளூராட்சி அமைப்புக் களினால் கிராமங்களில் உள்ள பொது மயானங்களை விருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல், வடிகால்கள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், வீதிகளமைத்தல், விருத்தி செய்தல் மற்றும் பராமரித்தல், தெரு விளக்கு(மின்சாரம்)கள் வழங்கல் போன்ற வேலைத் திட்டங்களுக்கு அதிக அளவு நிதிகளை உள்ளூராட்சி சபைகளுக்கு ஒதுக்குவதோடு முறையான நிரந்த அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும், அதனூடாக வேலைத் திட்டங்களை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

13. மாவட்டத்தின் விவசாயத்தைப் பாதிப்புக்கும் வகையாக அபிவிருத்தி என்னும் போர்வையில் மேற்கொள்ளப்படும் அளவுக்கு மீறிய மற்றும் அத்துமீறிய மண் அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதோடு அபிவிருத்திக்கும், சுயமாக வீடுகளை அமைப்போருக்கும் குந்தகங்கள் ஏற்படாதவாறு சரியான மேற்பார்வையின் கீழ் மண் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும்.

14. கிழக்கு மாகாணசபையால் நடத்தப்பட்ட ஆசிரியர் இடமாற்றங்கள் முறைகேடாக நடந்த இடமாற்றங்கள் என இரத்துச் செய்யப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்டகாலமாக ஆசிரியர் பற்றாக்குறை உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியரை நியமிக்கும் போது முறைகேடற்ற முறையில் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான துரித நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்

15. வவுணதீவு பிரதேசத்தில் 110 கிராமங்களில் 07 கிராமங்களுக்க மட்டுமே குடிநீர் வழங்குவதற்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் உவர்ப்பு நீர் உள்ள கிராமங்கள், குடிநீர் அற்ற மேட்டுநிலப்பகுதிகள் வரட்சி காலத்தில் குடிதண்ணீர் இல்லாமல் போகும் பகுதி எனப் பல கிராமங்கள் உள்ளன. எனவே இவ்வாறான கிராமங்களுக்கு முன்னுரிமை கொடுத்து நீர் வழங்குதல் வேண்டும்.

இத்தோடு இன்னும் பல பிரச்சினைகள் தொடர்பாக ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் நடைபெற்ற அபிவிருத்தி கூட்டங்களில் ஆராயப்பட்டன. அவ்விடயங்களை அடையாளம் கண்டு விரைவாகத் தீர்த்து வைப்பதோடு மாவட்டங்கள் பொதுவாக எதிர்நோக்குகின்ற மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு உடனடியாக தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரச அதிகாரத்தில் உள்ள தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதேவேளை, ஒரு பக்கச்சார்பாகவும் தனிப்பட்ட இலாபங்கள் மற்றும் சுய நலன்கள் கருதியும் லஞ்சம் பெறும் நோக் குடனும் தற்காலிக திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யும் போக்குகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

வெளிப்படைத்தன்மை இல்லாமல் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்வதை சமூக நலன் சார்ந்ததாக எமது மக்கள் பார்க்க மாட்டார்கள் என்பதை தவறான பாதையில் செல்லும் அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் புரிந்துகொள்ள வேண்டும்.

30 வருடகாலமாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதை மாகாண அரசும், மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்களும், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் கொழும்பு மத்திய அரசுக்கு தொடர்ந்து எடுத்துச் சொல்லி போதிய அளவு அபிவிருத்தி நிதிகளை மாவட்டத்துக்குப் பெற்றுக் கொள்வதில் விடாது முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். ●

**இராணுவ நிர்வாகத்தை நீக்குக**

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது உண்மையானால் வடக்கில் இராணுவ நிர்வாகம் அகற்றப்பட வேண்டும் என்கிறது ஜே.வி.பி. பயங்கரவாத தடைச்சட்டத்தையும் நீக்க வேண்டுமெனக் கோருகிறது.

**படைமுகாம்களை விரிவாக்க**

**கிறீஸ் பூதம் சாட்டு**

கிறீஸ் பூதத்தைக் காட்டி நாடு முழுவதும் படை முகாம்கள் அமைக்கப்படுகின்றன எனக் கூறுகின்றார் ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகரா நாட்டில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டாலும் அரசாங்கத்தின் அவசர சட்டத்தால் நாட்டு மக்கள் இன்னல்களை அனுபவிக்க வேண்டி வருமெனவும் எச்சரிக்கிறார். அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதால் அதி உயர் பாதுகாப்பு வலயமும் இரத்தாகிறது எனக்கூறுகிறார். இதற்கு மேலும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தை நடைமுறைப்படுத்த அவசியம் இல்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். ஆகையால் அதற்காக புதிய சட்டங்களை அமுலுக்கு கொண்டு வருவதற்காக அவசியம் எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆனாலும் பயங்கரவாத தடைச்சட்டத்தை விரிவாக்குவதற்காக ஜனாதிபதியால் சேர்க்கப்படும் நான்கு புதிய சட்டங்களில் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்வதற்கான சட்டங்களும் உள்ளதாகக் கூறப்படுகிறது.

# 2011ல் உள்ளூராட்சி. . .


(6ம் பக்கத் தொடர்ச்சி)

**வாக்களிப்பு வீதம்**

ஏற்கனவே இடம்பெற்ற தேர்தல்களில் இறந்தவர்கள் கூட வாக்கு போட்டதாக நையாண்டி செய்யப்பட்டது. வாக்காளர் இடாப்பு திருத்தம் செய்யப்படாமையால் இறந்தவர்களின் வாக்குகள் கள்ள வாக்குகளாகப் போடப்பட்டு வந்ததை இவ்வாறு குறிப்பிடப்பட்டது. இறந்தவர்கள் இடம் பெயர்ந்தவர்கள் பெயர்களும் வாக்காளர் இடாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது இவ்வாறு கள்ளவாக்கு போடுவதற்கு இலகுவாயிருந்தது. இப்போது திருத்தப்பட்ட வாக்காளர் இடாப்பில் இறந்தவர்கள் இடம்பெயர்ந்தவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நீக்கப்பட்ட பின் வாக்காளர்களின் தொகை வெகுவாக குறைவடைந்துள்ளது. 52 ஆயிரத்து 922 ஆகவிருந்த சாவகச்சேரி பிரதேச சபை வாக்காளர்களின் தொகை 37 ஆயிரத்து 015 ஆக குறைவடைந்திருந்தது. இது வரை காலமும் வாக்காளர் தொகை சரியாக கணிப்பிடப்படாதிருந்தமையால் வாக்களிப்பவர்களின் வீதத்தையும் சரியாக கணிப்பிட முடியவில்லை. இந்த தேர்தலில் திருத்தப்பட்ட வாக்காளர் இடாப்பினை பெரும்பாலானவர்கள் வாக்களிப்பர் என எதிர்பார்க்கப்பட்ட போதும் 51.47 வீதமானவர்களே வாக்களித்திருப்பதாக யாழ் மாவட்ட அரசாங்க அதிபரும், தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான இமெல்டா சுகுமார் தெரிவித்திருந்தார். 15 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக, 37 ஆயிரத்து 015 பதிவுபெற்ற வாக்காளர்களை கொண்ட சாவகச்சேரி பிரதேச சபைக்கான தேர்தலில் 18 ஆயிரத்து 232 பேர் மட்டுமே வாக்களித்திருந்தனர். சாவகச்சேரி பிரதேச சபை தேர்தலில் 49.2 வீதமானவர்களே வாக்களித்துள்ளனர். சபைகளை கைப்பற்றி விட்டோம், தோற்கடித்து விட்டோம் என்ற ஆர்ப்பரிப்புக்களுக்கு மத்தியில் வாக்களிப்பு வீதம் குறை வடைந்ததற்கான காரணங்கள் குறித்தும் சிந்தித் தாக வேண்டும். இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன? என்றும் மக்கள் துன்பப்படும் போது தேர்தல் எதற்கு? என்றும் தேர்தல் பகிஸ்கரிப்புக்களுக்கு பழக்கப்படுத்தப்பட்ட மக்கள் இப்போது கூட்டமைப்பினரே அதிகப்படியான வாக்குகளை எங்களுக்கு தாருங்கள் என்று கோரிய போதும் ஜனநாயக நடைமுறைகளிலிருந்து ஒதுங்கியிருப்பதை தேர்தல் முடிவுகள் புலப்படுத்துகின்றன. ●

# தோழர்களை நினைவு கூருகின்றோம்



தமிழ் பேசும் மக்களின் விடிவுக்கான போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்து செப்ரெம்பர் மாதத்தில் உயிர்நீத்த தோழர்கள். அவர்களின் உழைப்புக்களும், தியாகங்களும் வீண்போகாது அவர்களுடைய பணியை, நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு இத் தோழர்களுக்கு எமது அஞ்சலியை செலுத்துவோம்

| பெயர் | ஸ்தாபனப் பெயர் | இறந்த திகதி | இறந்த இடம் | இறப்புக்கான காரணம் |
|---|---|---|---|---|
| ஏ. அமிர்தலிங்கம் | ரஞ்சி | 06.09.1985 | மண்டூர், மட்டக்களப்பு | புலிகள் |
| கே. ராஜேந்திரன் | ஆதித்தன் | 18.06.1986 | தேத்தாத்தீவு, மட்டக்களப்பு | படையினர் |
| எஸ். அழகானந்தம் | சிவா | 18.09.1986 | தேத்தாத்தீவு, மட்டக்களப்பு. | படையினர் |
| கே. குருகுலசிங்கம் | ரூபன் | 11.09.1986 | கிரான்குளம்-07, மட்டக்களப்பு | படையினர் |
| வி. சுந்தரலிங்கம் | பகவான் | 06.09.1987 | மண்டூர், மட்டக்களப்பு, | புலிகள் |
| முருகேசு | சந்துரு | 11.09.1989 | ஏறாவூர், மட்டக்களப்பு | புலிகள் |
| சங்கரப்பிள்ளை | | 28.09.1987 | களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு, | புலிகள் |
| தாமோதரம் வசந்தகுமார் | தேவன் | 10.09.1987 | ஏறாவூர், மட்டக்களப்பு, | புலிகள் |
| | தேவன் | 19.09.1987 | தம்பிலுவில், மட்டக்களப்பு, | புலிகள் |
| | பிரதீப் | 29.09.1987 | ஏறாவூர், மட்டக்களப்பு, | புலிகள் |
| | அன்ரன் | 11.09.1989 | வாழைச்சேனை, மட்டக்களப்பு, | புலிகள் |
| பொ. கிருஷ்ணபிள்ளை | | 15.09.1990 | தாழங்குடா-02, மட்டக்களப்பு, | புலிகள் |
| எஸ். கரன் | கரன் | 19.09.1989 | நீர்வேலி, யாழ்ப்பாணம், | புலிகள் |
| கண்ணையா யோகராஜன் | | 03.09.1986. | | படையினர் |
| வேதநாயகம் ரவீந்திரன் | ரவி | 19.09.1989 | நீர்வேலி, யாழ்ப்பாணம். | புலிகள் |
| சின்னராஜா வியாகரன் | கரன் | 19.09.1989 | நீர்வேலி, யாழ்ப்பாணம், | புலிகள் |
| அல்பிரட் யோகராசா | போல் | 10.09.1986 | யாழ்ப்பாணம் | விபத்தில் |
| ஜேசுபாக்கியம் இம்மானுவேல் | குரோஸ் | 02.09.1990 | யாழ்ப்பாணம், | புலிகள் |
| ஏர்னஸ் கண்ணன் | கண்ணன் | 19.09.1989 | யாழ்ப்பாணம், | புலிகள் |
| வல்லிசுந்தரம் | சுந்தரம் | 27.09.2004 | மருதனாமடம், யாழ்ப்பாணம், | புலிகள் |

பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி
පත්මනාභා ඊළාම් ජනතා විප්ලවීය විමුක්ති පෙරමුණ
Pathmanabha Eelam Peoples' Revolutionary Liberation Front
No.15-C, Summit Flats, Keppetipola Mw., Colombo 05, Tel: 2505372, Fax: 2552840

*பத்திரிகை அறிக்கை* **Date : 26.08.2011**

## அவசரகாலநிலை நீக்கப்பட்டமைக்கு வரவேற்பு

இலங்கை பாராளுமன்றத்தில் நேற்று (25-08-2011) ஜனாதிபதி அவர்கள் அவசரவால நிலையை நீக்குவது தொடர்பாக மேற்கொண்ட அறிவிப்பை நாம் வரவேற்கிறோம். இதன் மூலம் கொடூரமான சட்டங்கள் அமுலில் இருந்த நிலையிலிருந்து இலங்கை மக்கள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த அவசரகால நிலை கடந்த மூன்று தசாப்தங்களாக இருந்து வந்திருக்கிறது. புலிகள் மற்றும் ஜே.வி.பி ஆகியவற்றுக்கு எதிரான யுத்த நடவடிக்கையின் போது அரசின் இந்த அவசரகால நிலை குறிப்பிட்டளவு நியாயப்படுத்தப்பட்டது. ஆனால் அதேவேளை இந்தச் சட்டங்கள் கண்மூடித்தனமான கொலைகள், தன்னிச்சையான கைதுகள் காலவரையற்ற சிறைவாசங்கள், சிறையில் அடைக்கப்பட்டோரை யாரும் பார்க்க முடியாத நிலைமைகள் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்பட்டமையை அனைவரும் கருத்திற் கொள்ள வேண்டி ஏற்பட்டது.

அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூக அமைப்புக்கள் ஆகியவற்றுடன் இணைந்து பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் உம் இந்த அவசரகால நிலையை நீக்குவதற்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்திருக்கிறது.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பானது ஜனநாயக அம்சங்களை பரவலாக்குவதற்கும் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படும் நிலையை விரிவு படுத்துவதற்கும் அவசியமான ஒரு முன்னெடுப்பாக அமையுமென நாம் மனதார நம்புகின்றோம். அதனையே இலங்கையின் அனைத்து மக்களும் நீண்டகாலமாக வேண்டி நின்றார்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட இந்த திருப்புமுனையான காலகட்டத்தில் பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப் ஐச் சேர்ந்த நாங்கள் அரச அதிகாரத்தில் இருக்கும் அனைவரும் மிகவும் கவனத்தோடும் எச்சரிக்கையோடும் தமது அதிகாரங்களை பயன்படுத்தி இந்த நாட்டின் அரசியல் முறைமையின் மீது மக்களுக்கு நம்பிக்கையை வளர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் இந்த நாட்டின் சமூக அரசியல் பங்காளர்கள் அனைவரும் இந்த நாட்டின் அனைத்து தேசிய இனங்களும் இந்த நாட்டை தமது தேசமென ஒருமுகமாக எண்ணும் வகையான வளர்ச்சியை அடைவதற்கு அவசியமான அரசியல் தீர்வொன்றை எய்துவதற்கு வேண்டிய சூழலை உருவாக்கி முன்னேற்றுவதில் பொறுப்போடு பங்களிக்க வேண்டுமெனவும் வேண்டிக்கொள்கிறோம்.

**அ. வரதராஜப்பெருமாள்**
முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர்.

## சம்பூர் மின் உற்பத்தி நிலையம்

## இந்தியா – இலங்கை இறுதி ஒப்பந்தம்




**500** மெகாவட் மின்சாரத்தினை நிலக்கரியைப் பயன்படுத்தி உற்பத்தி செய்வதற்கான நிலையத்தை சம்பூரில் அமைப்பது தொடர்பாக கடந்த இரு வருடங்களாக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பல்வேறு பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் கையெழுத்திடலும் இழுபறிகளும் இடம்பெற்று வந்தன.

கடந்த செப்டம்பர் ஆறாம் திகதியோடு அதற்கான இறுதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இத்திட்டத்தில் இலங்கை மின்சார சபையும், இந்தியாவின் தேசிய அனல் மின்சகதி நிறுவனமும் ஐம்பதுக்கு ஐம்பது என முதலீடு செய்ய உள்ளன. இதற்காக கொட்டியாரக்குடாவில் நிலக்கரி இறக்குவதற்கான கப்பற் துறைமுகம் ஒன்றும் அமைக்கப்பட உள்ளது. இத் துறைமுகம் 40,000 தொன் தொடக்கம் 1,75,000 தொன் வரையிலான சரக்குக் கப்பல்கள் நிற்கக் கூடிய வகையில் அமைக்கப் படவுள்ளது.

இங்கு மின்சார உற்பத்திக்கு ஒரு வருடத்துக்கு 14 இலட்சம் தொன் நிலக்கரி பயன்படுத்தப்படும் என கணக்கிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே புத்தளத்தில் சீனாவின் உதவியுடன் 900 மெகாவாட் மின் உற்பத்தி நிலையம் அமைக்கப் பட்டது. சம்பூர் அனல் மின் நிலையம் இலங்கையில் நிலக்கரியில் மின்சார உற்பத்தி செய்யப் படவுள்ள இரண்டாவது நிலையமாகும்.

இத் திட்டத்தினால் ஆயிரக்கணக்கான சம்பூர் மக்கள் அகதிகளாக் கப்பட்டுள்ளனர் இந்த மின்சார உற்பத்தி நிலையத்தினால் இம் மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கப் படுமா அல்லது அவர்கள் புறக் கணிக்கப்படுவார்களா என்பதே இங்குள்ள மக்களின் கேள்விகளாகும்.

### கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நல்ல குடிநீர்

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு குடிநீர் கொண்டுவரும் திட்டம் ஆரம்பமாகிவிட்டது என கூறியிருக்கிறார் யாழ் அரசாங்க அதிபர். இதற்கான முதற்கட்ட பணி 165 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுடன் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் யாழ்ப்பாணம், கொடிகாமம், சாவகச்சேரி, நாவற்குழி, கரவெட்டி, கோப்பாய், சண்டிலிப்பாய், கச்சேரி, நல்லூர், மூளாய், அராலி, வட்டுக்கோட்டை, காரைநகர், ஊர்காவற்றுறை, புங்குடு தீவு, அனலைதீவு, எழுவைதீவு, மண்டைதீவு, பூநகரி, பளை ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படவுள்ளது.

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இல 119, பல்கலைக்கழக வீதி, இரத்தினப்பிட்டிய, பொரலஸ்கமுவ சி.ஆர்.சி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.